விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபத்து நான்கு

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 சித்திரை 01 வியாழக்கிழமை (14.04.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 116

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

RAMCO

## ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை தவறானது!

## அரசாங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் நியமித்த இலங்கை தொடர்பான நிபுணர் குழு சமர்ப்பித்துள்ள இலங்கையின் பொறுப்புடைமை தொடர்பான அறிக்கை தவறானதும் பாரபட்சமானதுமாகும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

மூன்று அங்கத்தவர்கள் கொண்ட மேற்படி நிபுணர் குழு நேற்று ஐ.நா.செயலாளர் நாயகத்திடம் தனது அறிக்கையை சமர்ப்பித்தது. இந்த அறிக்கையின் பிரதியொன்று தனக்கு கிடைத்துள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (02ஆம் பக்கம் பார்க்க)

## கிடைத்தது அறிக்கை; அடுத்தது நடவடிக்கை

### பான் கீ மூன் தெரிவிப்பு

(நியூயோர்க்)

இலங்கையின் போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக நிபுணர் குழு வழங்கியுள்ள அறிக்கையை ஆராய்ந்த பின்னர் அடுத்து என்னசெய்வதென்று சில தினங்களில் தீர்மானிக்கப்படும் என ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் இறுதிக்கட்ட யுத்தத்தின் போது மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பாக பொறுப்புக் கூறுதல் தொடர்பாக ஐ.நா செயலாளர் நாயகத்திற்கு ஆலோசனை வழங்குவதற்காக அவரால் கடந்த வருடம் மே மாதம் நியமிக்கப்பட்ட மூன்று பேர் கொண்ட நிபுணர்கள் குழு தனது பணியை செப்டம்பர் மாதம் ஆரம்பித்திருந்தது.


இலங்கை அரசின் கடும் எதிர்ப்புக்கள், அதிருப்திக்கு மத்தியில் இந்தக்குழு இலங்கைக்கு செல்லாமலே தனது ஆய்வுகளை மேற்கொண்டு செவ்வாயன்று தனது அறிக்கையை கையளித்துள்ளது. இதன் ஒரு பிரதி இலங்கை (24 ஆம் பக்கம் பார்க்க)

### புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

இன்று பிறக்கும் கர வருடப் பிறப்பில் அனைவரும்
சுபீட்சத்துடன் வாழ இறைவனைப் பிரார்த்திப்பதுடன்
வாசகர்கள், விளம்பரதாரர்கள், அன்பர்கள்
நண்பர்கள் அனைவருக்கும் எமது
புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத்
தெரிவித்துக் கொள்கிறோம்.

வலம்புரிக் குடும்பம்

## அமெரிக்காவுக்கு விரைவில் பதிலடி; ஜனாதிபதி மகிந்த நடவடிக்கை!



(கொழும்பு)

இலங்கையின் மனிதவுரிமைகள் நிலைமை தொடர்பில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் வெளியிட்ட அறிக்கைக்குப் பதில் கொடுக்கும் வகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அறிக்கை ஒன்றை வெளியிடவுள்ளார்.

அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ பதிலாக அமையும் வகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அறிக்கை அமையும் என கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

மனிதவுரிமை விவகாரங்கள் அமைச்சர் மகிந்த சமரசிங்க இந்த அறிக்கையின் வரைபைத் தயாரித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிடம் கையளித்துள்ளார். ஜனாதிபதி இவ்வறிக்கையை ஆராய்ந்து ஒப்புதல் வழங்கிய பின்னர் இவ்வறிக்கை வெளியிடப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ் அறிக்கை அமெரிக்காவை கடுமையாகக் கண்டிக்கும் வகையில் கடும் தொனியில் அமைந்திருக்கும் என எதிர்பார்ப்பதாக அந்தத் தகவலில் கூறப்பட்டுள்ளது. அரசாங்கம் படைத்தரப்பினர் மற்றும் துணை ஆயுதக் குழுக்களும் கடுமையான மனிதவுரிமை மீறல்களில் ஈடுபட்டுள்ளதாக அமெரிக்க இராஜாங்க திணைக்களம் கடந்த 08ஆம் திகதி வெளியிட்ட (02ஆம் பக்கம் பார்க்க)

### ஐ.நா. நிபுணர்கள் குழு வெளியிட்ட

## அறிக்கையை பகிரங்கப்படுத்துமாறு மனிதவுரிமை அமைப்புக்கள் கோரிக்கை

(கொழும்பு)

வன்னியில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பாக நிபுணர்கள் குழு கையளித்துள்ள அறிக்கையை பகிரங்கப்படுத்துமாறு சர்வதேச மனிதவுரிமை அமைப்புக்கள் ஐக்கிய நாடுகள் சபையை வலியுறுத்தியுள்ளன.

அத்துடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கும் வகையில் போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்களுக்குப் பொறுப்புக்கூறும் சர்வதேசப் பொறிமுறை ஒன்றை உருவாக்கும்படி சர்வதேச மன்னிப்புச் சபையும் மனிதவுரிமைகள் கண்காணிப்பகமும் ஐக்கியநாடுகள் சபையை வலியுறுத்தியுள்ளன.

இது குறித்து நியூயோர்க்கைத் தளமாகக் கொண்ட மனிதவுரிமைகள் கண்காணிப்பகம் மற்றும் சர்வதேச மன்னிப்புச்சபை ஆகிய அமைப்புக்கள் அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.

வன்னிப்போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனால் நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழு கையளித்துள்ள அறிக்கையை நீதியை நிலைநாட்டுவதற்காக ஐக்கியநாடுகள் சபை பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என மனிதவுரிமைகள் கண்காணிப்பகம் தமது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளது.

வன்னிப் போருக்கு (02ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியா உலகக் கிண்ணத்தை கைப்பற்றியது இலங்கைக் கடற்படையினருக்கு ஆத்திரம்!

### மதுரை நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

(சென்னை)

உலகக் கிண்ணத் துடுப்பாட்டப் போட்டியில் இந்தியா வெற்றிபெற்ற ஆத்திரத்தில் இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் எனத் தொடரப்பட்ட வழக்கில் மத்திய, மாநில அரசுகளை பதிலளிக்கும்படி மதுரை மேல் நீதிமன்றம் முன்னறிவித்தல் கடிதம் அனுப்பியுள்ளது.

இராமேஸ்வரம் பிரதேசத்தில் அமைந்துள்ள தங்கச்சிமடம் பிரதேசத்தைச் சேர்ந்த நல்லதம்பி என்பவர் மதுரை மேல் நீதிமன்றக் கிளையில் இம் மனுவைத் தாக்கல் செய்திருந்தார். இம் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இராமேஸ்வரத்தைச் சேர்ந்த மீனவர்கள் விக்டஸ், ஜோன்போல், அந்தோனிராஜ், திருச்சுழியை சேர்ந்த மாரிமுத்து ஆகியோர் கடந்த 02 ஆம் திகதி மீன்பிடிக்க கடலுக்குச் சென்றனர்.

மறுநாள் காலை 399 விசைப்படகுகள் கரைதிரும்பிய நிலையில் இவர்கள் சென்ற விசைப்படகு மட்டும் கரை திரும்பவில்லை. காணாமல் மீனவர்களைத் தேடி சென்ற மீட்புப் படகுகளை இலங்கைக் கடற்படையினர் விரட்டியடித்தனர். (02ஆம் பக்கம் பார்க்க)







கிளிநொச்சியில்... அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

கிருபா லேணர்ஸ்

Regd No Ds/589

அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை

தலைமைக் காரியாலயம்:-
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். தொலைபேசி :- 021 222 4353, 0777225292

கிளை :- கிளிநொச்சியில்
ஐயனார் வீதி. (கச்சேரிக்கு அருகாமை)
கிளிநொச்சி. தொலைபேசி :- 021 2285505, 0777238600



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**Study & Work in UK and Canada**

Hurry......for Jan-2011
Intake Get Register Now
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation

என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான வீஸா பெறுவதற்கான Sponsorship பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)

# ஐ.நா. நிபுணர் குழுவின்...

ஐ.நா.நிபுணர் குழு இலங்கை தொடர்பில் தயாரித்து ஐ.நா.செயலாளர் நாயகம் பான் கீ மூனிடம் கையளித்த அறிக்கையின் பிரதி கிடைத்துள்ளது என வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; ஐ.நா.மன்ற ஆணையின் பேரில் வல்லுநர் குழுவொன்று தயாரித்தளித்த இந்த அறிக்கை அடிப்படையிலேயே பல விடயங்களில் குறைபாடுகளை கொண்டுள்ளது. மேலும் இந்த அறிக்கை பாரபட்சமானது என்றும் தெளிவாகவே அறிய முடிகிறது.

இது சரிபார்க்கப்படாத விடயங்களின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது என அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இதேவேளை இலங்கை அரசு ஐ.நா. செயலாளர் பான் கீ மூன் நியமித்த இந்த குழு தொடர்பில் அடிப்படையிலிருந்தே தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை நிபுணர்கள் குழுவின் அறிக்கையை வெளியிட வேண்டாம் எனவும் ;அவ் அறிக்கைக்கு விரைவில் உரிய பதில் அனுப்பப்படும் எனவும் ஐ:நா.செயலாளர் நாயகம் பான் கீ மூனுக்கு கடிதம் அனுப்பி வைக்க இலங்கை தீர்மானித்துள்ளதாகவும் கூறப்படுகிறது. (எ-5 ;6)

**வர்த்தகப் பெருமக்களே...**

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290

# இந்தியா உலகக் கிண்ணத்...

கடந்த 08ஆம் திகதி நெடுந்தீவுப் பகுதியில் இரத்தக் காயங்களுடன் விக்டஸின் உடல் கண்டுபிடிக்கப்பட்டது. அந்தோனிராஜ் உடல் தொண்டி கடற் பகுதியில்கரைஒதுங்கியுள்ளது. ஏனைய இரு மீனவர்களின் கதி என்ன என்பது தெரியவில்லை.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் கடந்த 02ஆம் திகதி இடம் பெற்ற உலகக் கிண்ண துடுப்பாட்டப் போட்டியில் இந்திய அணிவெற்றிபெற்று உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியது. இந்த ஆத்திரம் காரணமாக இலங்கைக் கடற்படையினர் தமிழக மீனவர்களைத் தாக்கி கடலுக்குள் தள்ளியிருக்கலாம் என்றசந்தேகம்ஏற்பட் டுள்ளது.

தமிழகமீனவர்கள்சென்றபடகையும் காணவில்லை. எனவே மாயமான இரு தமிழக மீனவர்களை மீட்க உரிய நடவடிக்கை எடுக்கும்படி மத்திய, மாநில அரசுகளுக்கு உத்தரவிட வேண்டும் என இம் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம் மனுவை விசாரணைக்கு ஏற்றுக்கொண்ட நீதிபதிகள் இந்த வழக்குத் தொடர்பாக மத்திய உள்துறைச் செயலாளர்,இலங்கைக்கான இந்தியத் தூதரகம் மற்றும் தமிழக உள்துறைச் செயலாளர் ஆகியோரை பதிலளிக்கும்படி முன்னறிவித்தற் கடிதம் அனுப்ப உத்தரவிட்டதுடன் இவ் வழக்கு விசாரணையை எதிர்வரும் 25ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தனர். (எ-1)

# அமெரிக்காவுக்கு விரை...

அறிக்கையில் இக் குற்றச்சாட்டை முன்வைத்திருந்தது.

இவ் அறிக்கையில் ஜனாதிபதியின் குடும்பம் அரசியலில் செலுத்தும் ஆதிக்கம் தொடக்கம் ஆட்கடத்தல்கள், சட்டத்துக்கு முரணான படுகொலைகள், துன்புறுத்தல்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்களில் டக்ளஸ் தேவானந்தா, கருணா, பிள்ளையான் போன்றோருக்கு உள்ள தொடர்புகள் என பல்வேறு மனித வுரிமை மீறல்கள் தொடர்பில் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.

2009ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது கடந்த ஆண்டில் ஆட்கடத்தல்கள், சட்டத்துக்கு முரணான படுகொலைகளின் எண்ணிக்கை இலங்கையில் குறைவடைந்துள்ள போதிலும் இலங்கைப் படைத்தரப்பினரும் அதன் துணைக்குழுக்களும் தொடர்ந்தும் மோசமான மனிதவுரிமை மீறல்களுக்குப் பொறுப்பாக இருப்பதாக அமெரிக்கா தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அறிக்கை முட்டாள்தனமான அறிக்கை என இலங்கையின் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவ விஜேசிங்க கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# ஐ.நா...

பலியான மக்களை ஐக்கிய நாடுகள் சபை மறந்துவிடக் கூடாது என தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ள மனித வுரிமைகள் கண்காணிப்பகம் நிபுணர்கள் குழுவின் அறிக்கை பொதுமக்களுக்கு பகிரங்கப்படுத்த வேண்டும் என வலியுறுத்தியுள்ளது.

போர்க் குற்றங்கள் மற்றும் மனித வுரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் இருவருடங்களாக மறைத்து வைத்திருந்த உண்மைகளை வெளிப்படுத்த இது உதவும் என மனிதவுரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக் காட்டியுள்ளது.

நிபுணர்கள் குழுவின் அறிக்கை தொடர்பில் கருத்துத் தெரிவித்த மனிதவுரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசியப் பிராந்தியப் பணிப்பாளர் பிரட் அடம்ஸ் இவ் அறிக்கை பகிரங்கப்படுத்தப்பட்டால் இலங்கையில் மனிதவுரிமை விவகாரங்களை மேன்மைப்படுத்த உதவியாக அமையும் எனக் கூறியுள்ளார். (ச-5)

**RK Ceramic**
NO.122, Main Street
Nelliady
Tel: 0776660699
0213207525
வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அதி நவீன
* Floor Tiles
* Wall Tiles
* Bathroom Tiles
* Commode Set
* Electic Shaver
* Shower Curtain
* Plastic Doors
* Water Heater
* Wash Basin
* Mirror Sets
* Bathroom Accessories
* Sink
* Floor Polisher
* Shower
* Taps
போன்றவற்றையும் இன்னும் பல வீட்டு உபயோகப் பொருட்களையும் தரமாகவும் மலிவாகவும், நியாய விலையிலும் பெற்றுக் கொள்ளலாம்.
(4489)

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
புத்தாண்டு வாழ்த்துக்கள்
**எக்ஸலண்ட் ரெக்ஸ்**
**EXCELLENT TEX**



Dealers in Textiles & Ready-made Germents
NO: 55, K.K.S. Road, Chunnakam
T.P: 077 5279228, 021 3207798

**சந்திரகாந்தன் திருமண சேவை**
அரச பதிவு: VW/FIN/R/I/12/2009
திருப்தியாகவும் துரிதமாகவும் செயல்படும் ஸ்தாபனம்.
T.P: 0775081756
தொல்புரம் மத்தி, சுழிபுரம்
S.ஆனந்தி, இயக்குனர்.
உள்நாட்டு, வெளிநாட்டு மணமகள், மணமகன் எம்மிடம் உண்டு.
தொலைபேசி மூலமும், தபால் மூலமும் தொடர்பு கொள்ளலாம்.
(4490)

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
புத்தாண்டு வாழ்த்துக்கள்
T.K.T.மார்க்
சுத்தமான திறம் நல்லெண்ணெய்
தில்லையம்பலம் கந்தையா ஸ்ரோர்ஸ்
மூத்தநயினார் கோவிலடி, ஆனைக்கோட்டை.
LUNCH - OIL
T.K.T. Mark
BEST GINGELLY OIL
Thillaiyampalam Kandiah Stores,
Moothanainar Kovilady,
Anaicoddai.
(4491)

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
புத்தாண்டு வாழ்த்துக்கள்
தணிஸ் ரெக்ஸ்
**THANIS TEX**



மூத்தநயினார் கோவிலடி,
நவாலி வீதி,
ஆனைக்கோட்டை
Moothanainar Kovilady
Navaly Road,
Anaicoddai
(4491)

வாடிக்கையாளர்கள், நண்பர்கள் மற்றும் அனைவருக்கும்
எமது இனிய சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

மிகவிரைவில் Onlineல் விலை விபரங்கள்
www.nit.lk

வடபகுதியில் முதற்தர கணணி
விற்பனை நிறுவனமாகிய
நளின் நிறுவனம்
Printer, Scanner, Toner, Cartridge, etc...
அனைத்திற்கும் தனியான காட்சியறை
உங்கள்வசதிக்காக.........

* எமது நிறுவனம் கணணி, கணணி உதிரிப்பாகங்களை இறக்குமதி செய்பவர்களுடன் நேரடியான விற்பனைப்பங்காளர்
* உத்தரவாதத்துடன் உதிரிப்பாகங்கள் உடனடியாகவே மாற்றிக்கொடுக்கப்படுகின்றன
* குறைவான விலையில் தரமான உதிரிப்பாகங்களிற்கும் விற்பனைக்கு பிந்திய விரைவான சேவைக்கும் நளின்

மிக விரைவில் நளினின் LAPTOPகளிற்கான தனியான காட்சியறை

Toner House
இல:-195/2 பலபலி வீதி, திருநெல்வேலி
T.P 021 222 1121

NALIN Information Technologies Pvt Ltd.
Nalin information Technologies
இல:-195/4 பலபலி வீதி, திருநெல்வேலி
T.P 021 222 1166, 0777667974

# சித்திரை புத்தாண்டு சிறப்பு மலர்-14.04.2011


அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்



சுபமுகூர்த்த கலெக்ஷன்

திருமணப்பட்டுகளின் அணிவரிசை.
இதுவரையில் கண்டிராத எண்ணற்ற
புதிய டிசைன்களின் வண்ணக்குவியல்கள் !

பட்டு, ஜவுளி & ரெடிமேட்ஸ்



## காவேரி சில்க்ஸ்

48, பெரிய கடை, யாழ்ப்பாணம்



## Midea Electro Mart

e-mail: midea21@gmail.com
No:1-1, 1-H, STANLEY ROAD,JAFFNA.
TEL: 021 222 4566, FAX: 021 222 1646
www. mideamart.com

## Midea PC Show Room




Authorized Dealer for Abans Ltd.

| COMPUTER | INTEL DUAL CORE | INTEL DUAL CORE | INTEL CORE i3 | INTEL CORE i5 |
|---|---|---|---|---|
| Processor | Intel Dualcore 3.2 GHZ | Intel Dualcore 3.2 GHZ | INTEL CORE i3 3.06Ghz | Intelcore i5 3.20Ghz |
| Mother board | Intel Chipset G 41 MT 7 | Intel Chipset G41 | Intel DH55PJ | Intel DH55PJ |
| Memory | 1GB DDR-II, 800 MHZ | 2GB DDR-II, 800 MHZ | 2GB DDR -III | 2GB DDR - III |
| Hard disk | 320 GB SATA-7200 RPM | 500 GB SATA-7200 RPM | 500GB SATA-7200RPM | 500GB SATA-7200RPM |
| Disk drive | LG DVD Writer | LG DVD Writer | ATX 500W Gigabyte | ATX 500W Gigabyte |
| Casing | ATX 500W Gigabyte | ATX 500W Gigabyte | LG DVD Writer | LG DVD Writer |
| Monitor | LG LCD 16" | DELL LCD 18.5" | DELL LCD 18.5" | DELL LCD 18.5" |
| Key board | I - NEX USB, PS/2 | I - NEX USB, PS/2 | I - NEX USB, PS/2 | I - NEX USB, PS/2 |
| Mouse | I - NEX Optical USB/Ps2 | I - NEX Optical USB/Ps2 | I - NEX Optical USB/Ps2 | I - NEXOptical USB/PS/2 |
| Speaker | Multimedia Speaker | Multimedia Speaker | Multimedia Speaker | Multimedia Speaker |
| Price | Rs. 39,900.00 | Rs.42,900.00 | Rs. 52,900.00 | Rs. 62,900.00 |




| | | | | | |
|---|---|---|---|---|---|
| Toshiba Mini | COMPACO 620 Laptop | Lenovo | ACER5742Z Laptop | HP Probook 4520s | HP Pavilion dv6t 3200 |
| Atom Intel 1.6Ghz | Intel Core 2 Duo 2.2 | Intel Core i3 | Intel core i3 | Intel core i3 | Intelcore i3 |
| Dos | Dos | Dos | Dos | Win7 Home Pre | Win 7 Home Pre |
| 1GB | 2GB | 2GB | VGA 1GB HD Grap | VGA 1GB HD Grap | VGA 1GB HD Grap |
| H.D250GB | 320GB HDD | 500GB HDD | RAM 2GB DDRIII | RAM 2GB | Ram 4GB DDRIII |
| 128MB | DVD Writer | DVD Writer | H.D 320GB | HDD 320GB | HD 500GB |
| webCam With Mic | 796MB | HD Graphics | web Camera With Mic | DVDWriter | Web Cam with Mic |
| LCD 10.1" | web CameraWith Mic | web CameraWith Mic | Wifi | Wifi | DVD Super Multi |
| WIFI Blue Tooth | 15.6" | 15.6" | DVD super multi | web Camera With Mic | LCD 15.6 |
| | WIFI Blue Tooth | FFR | LCD 15.6" | LCD 15.6" | Wifi |
| Rs. 44,900.00 | Rs. 64,900.00 | Rs. 72,900.00 | Rs. 69,900.00 | Rs. 77,900.00 | Rs. 99,900.00 |



உலகத் தரம் வாய்ந்த
வீட்டு பாவனை
மின் உபகரணங்களை
Abans
நிறுவனத்தின்

உத்தரவாதத்துடன்
இலவச விநியோகத்தையும்
பெற்றிடலாம்.





மகிழ்ச்சி பொங்க
செல்வம் செழிக்க
இனிய புத்தாண்டு
வாழ்த்துக்கள்

## Dulux



AkzoNobel யாழ்ப்பாண விநியோகஸ்தர்கள்

## சிவன் மோட்டோர்ஸ் ஸ்ரோர்ஸ்

70/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்   கண்டி வீதி, சாவகச்சேரி

## சிவகுமரன் என்ரபிறைஸ்

75, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

# பிறக்கப்போகும் புதிய 'கர' வருட சுப கருமங்கள்

### வாக்கிய பஞ்சாங்கம்

சித்திரைமாதம் முதலாம் திகதி (14.04.2011) வியாழக்கிழமை முற்பகல் 11.33 மணி க்கு பூர்வபக்க ஏகாதசித்திதியில் மக நட்சத்திரத்தின் 3 ஆம் பாதத்தில் கண்டம் நாம யோகத்தில் விட்டிக் கரணத்தில் மிதுன லக்கினத்தில் மேட நவாம்சத்தில் சந்திரன் கால வோரையில் புதன் சூக்குமவேளை யில் சாத்வீக குண வேளையில் நட்சத்திர பட்சி யாகிய ஆந்தை நடைத்தொழிலும் சூக்கும பட்சி உண்டித் தொழிலும் செய்யும் காலத்தில் இப்புதிய 'கர' வருடம் பிறக்கின் றது. அன்று முற்பகல் 7.33 மணி முதல் அன்று பிற்பகல் 3.33 மணி வரை விஷு புண்ணிய காலமாகும்.

இப்புண்ணிய காலத்தில் யாவரும் சங்கற்பித்து மருத்து நீர் தேய்த்து தலையில் கடப்பமிலையும், காலில் கொன்றை இலையும் வைத்து ஸ்நானஞ்செய்து பொன்னிறமான பட்டாடையாயினும் அல்லது பச்சைக் கரையமைந்த புதிய ஆடையாயினும் உடுத்து, புஸ்பராகம், பச்சை மரகதம் கலந்த ஆபரணமணிந்து, மங்களகரமாக விக்கினேஸ்வரர் முதலிய குலதெய்வ வழிபாடுகள் செய்து அறுசுவைஉண்டியுடன்பாற்சோறு,தேன், சேர்த் தருந்தி மங்களகரமாக வாழ்வார்களாக.

### தோச நட்சத்திரங்கள்

அச்சுவினி, மகம், பூரம், உத்தரம், மூலம், உத்தராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2.

இவற்றில் பிறந்தோர் தவறாது மருத்து நீர் தேய்த்து தானதரும வழிபாடுகளைச் செய்து தோச நிவர்த்தி செய்யக் கடவர்.

**கைவிசேஷ நாள் நேரம்**

14.04.2011 வியாழக்கிழமை முற்பகல் 11.37 மணி தொடக்கம் நண்பகல் 12.02 மணி வரை

14.04.2011 வியாழக்கிழமை நண்பகல் 12.14 மணி தொடக்கம் பிற்பகல் 1.27 மணி வரை

14.04.2011 வியாழக்கிழமை பிற்பகல் 4.22 மணி தொடக்கம் பிற்பகல் 6.07 மணி வரை

14.04.2011 வியாழக்கிழமை மாலை 6.42 மணி தொடக்கம் முன்னிரவு 7.29 மணி வரை

14.04.2011 வியாழக்கிழமை முன்னிரவு 7.41 மணி தொடக்கம் முன்னிரவு 8.11 மணி வரை

### திருக்கணித பஞ்சாங்கம்

சித்திரை மாதம் 1 ஆம் திகதி (14.04.2011 வியாழக்கிழமை) பகல் 1.00 மணிக்கு 'கர' என்னும் புதிய வருடம் பிறக்கின்றது.

அன்று மக நட்சத்திரம் 2 ஆம் பாதமும், ஏகாதசித் திதியும், அமிர்த யோகமும் கூடிய வேளையில் கடக லக்கினத்தில் புதிய வருடம் பிறக்கின்றது.

அன்று காலை 9.00 மணி தொடக்கம் அன்று மாலை 5.00 மணி வரை விஷு புண்ணிய காலமாகும்.

இப்புதிய வருடத்தில் யாவரும் சங்கற்ப பூர்வமாக மருத்து நீர் வைத்து தலையில் கொன்றை இலையும், காலில் புங்கம் இலையும் வைத்து ஸ்நானம் செய்து மஞ்சள் நிற பட்டாடையாயினும் அல்லது மஞ்சள் நிறம் அமைந்த வெள்ளைப்புது ஆடையாயினும் தரித்து புஸ்பராகம் சேர்ந்த ஆபரணங்களை அணிந்து விநாயகர் முதலிய இஷ்ட குல தெய்வ வழிபாடுகளைச் செய்து, சூரியனுக்கு பொங்கல் வழிபாடுகள் செய்து, நற்கருமங்களைப் பேணி மங்களகரமாக வாழ்வீர்களாக.

### சுக்கிரம தோச நட்சத்திரங்கள்

அச்சுவினி, மகம், பூரம், உத்தரம் 1, மூலம், உத்தராடம் 2,3,4 திருவோணம் அவிட்டம் 1,2.

இவற்றில் பிறந்தோர் தவறாது மருத்து நீர் தேய்த்து தான தருமங்களைச் செய்து தோச நிவர்த்தி செய்யக் கடவர்.


**கைவிசேஷ நாள் நேரம்**

14.04.2011 வியாழன் நண்பகல் 12.02 மணி தொடக்கம் பிற்பகல் 1.14 மணி வரை

14.04.2011 வியாழன் மா்லை 6.02 மணி தொடக்கம் முன்னிரவு 7.38 மணி வரை

14.04.2011 வியாழன் முன்னிரவு 8.26 மணி தொடக்கம் முன்னிரவு 10.02 மணி வரை.

# கர வருட புத்தாண்டுப் பலன்கள் உங்களுக்கு எப்படி?




**(கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2ஆம் பாதங்கள் வரை)**

**குடும்பத்தினரை அனுசரிப்பதால், குதூகலம் வந்து குடியேறும்!**

**சவால் விடுவதையும், அதை சமாளிப்பதையும் கைவந்த கலையாகக் கொண்டிருக்கும் இடபராசி நேயர்களே!**

விக்ருதி ஆண்டு முடிந்து விட்டது. கர வருடம் பிறந்து விட்டது. பிறந்திருக்கும் புத்தாண்டு நமக்கு பெருமைகளைச் சேர்க்குமா? நிரந்தரமாக நமக்கு நிம்மதி கிடைக்குமா? என்ற கேள்விகளுக்கு விடை காணும் விதத்தில் இந்த புத்தாண்டு உங்களுக்கு அமையப் போகிறது.

உங்களை பொறுத்தவரை, கர புத்தாண்டில் ராசிநாதன் சுக்ரன் தொழில் ஸ்தானத்தில் சஞ்சரித்து, சகாய ஸ்தானத்திற்கு அதிபதியான சந்திரனால் பார்க்கப்படுகிறார். எனவே, தொழில் வளர்ச்சி கூடும் ஆண்டாகவே இந்த ஆண்டைக் கருதலாம். எதிர்பார்த்த இடத்திலிருந்து தொகையும் கிடைக்கும் என்பதால், காலம் காலமாக உத்தியோகத்தில் இருந்து மற்றவர்களுக்கு உழைத்துக் கொடுத்த நீங்கள் இப்பொழுது, சுயசம்பாத்தியத்திற்கு அடித்தளமிடப் போகிறீர்கள்.

என்னதான், ராசிநாதன் பலம் பெற்றிருந்தாலும், இடையில் வரும் கிரகப் பெயர்ச்சிகள் உங்களுக்கு ஒத்துழைக்க வேண்டுமல்லவா? எனவே, அவற்றையும் வைத்து எடை போட்டுத்தான் நாம் பலன்களை அறிந்து கொள்ள முடியும். இந்த ஆண்டு மாபெரும் கிரகங்கள் குரு, ராகு-கேது மற்றும் சனி ஆகியவை பெயர்ச்சியாகின்றன.

இடையிடையே வக்ரமாகியும் உங்கள் வளர்ச்சிப்பாதையில் சில மாற்றங்களைக் கொடுக்கப் போகின்றன.

நமக்கு நல்ல முறையில் பலன் கொடுக்காத கிரகங்கள் வக்ரமானால், அதைப்பற்றி கவலைப்பட வேண்டாம். ஆனால், நல்ல பலன்களை மட்டுமே வாரி வழங்கும் யோக கிரகம் வக்ரம் பெற்றால், நாம் பொறுமையோடு தான் செயல்பட வேண்டும். அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது, வருடத் தொடக்கத்திலேயே உங்களுக்கு யோகம் செய்யும் சனி வக்ரமடைகிறார்.

எனவே, அதன் வக்ர காலத்தில் எதையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்து செய்வது நல்லது. உங்கள் சுயஜாதகத்தை ஒருமுறை ஆராய்ந்து பார்த்து, தெசாபுத்தி பலம்பெற்று இருந்தால், வரும் மாற்றங்களை ஏற்றுக் கொள்ளலாம். இல்லையேல், விட்டு விடலாம்.

**நட்புக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நல்லவர்கள்!**

வாழ்க்கையில் புதிய மனிதர்களைச் சந்தித்து, வளர்ச்சிப் பாதையை அமைத்துக் கொள்ள வேண்டுமென்று நினைப்பீர்கள். கவர்ச்சியாகப் பேசி காரியங்களை சாதித்து விடும் திறமை உங்களுக்கு உண்டு. அதிகாரத்திற்கு கட்டுப்பட மாட்டீர்கள். அதேநேரத்தில் அன்புக்கு அடிபணிவீர்கள்.

சுக்ரனின் பலத்தோடு, புதனின் பலமும் உங்கள் சுயஜாதகத்தில் கை கொடுத்தால், சொல்லை செயலாக்கி காட்ட இயலும். நல்ல வாழ்க்கைத் துணையும் அமையும். மனைவியைத் தேர்ந்தெடுக்கும் பொழுது, மாங்கல்ய பொருத்தத்தோடு, மகத்தான ராசி அதிபதியும் பொருந்தினால் தான் மனதிற்கினிய் வாழ்க்கை அமையும். ஆதியில் இருக்கும் பக்தியைக் காட்டிலும், பாதி வாழ்க்கைக்கு மேல் வரும் பக்தியே பார்ப்பவரை ஆச்சரியப்பட வைக்கும்.

**ஆசைகளை நிறைவேற்றும் மேஷ குரு**

கர வருடத் தொடக்கத்தில் சித்திரை 25ஆம் திகதி (8.5.2011) உங்களது ராசிக்கு பன்னிரெண்டாம் இடத்தில் குருபகவான் சஞ்சரிக்கப்போகிறார். விரய ஸ்தானத்திற்கு வரும் குரு செலவுகளை ஏற்படுத்துமோ? என்று நீங்கள் கவலைப்பட வேண்டாம். அதன் பார்வை பலமே உங்களுக்கு பக்க பலமாக இருக்கும்.

குறிப்பாக, குருவின் பார்வை 4, 6, 8 ஆகிய இடங்களில் பதியப் போவதால், அந்த இடங்கள் எல்லாம் புனிதமடைந்து, புதிய வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுக்கும்.

"பன்னிரெண்டில் குருவந்தால்,
பயணங்கள் அதிகரிக்கும்!
இனியென்றும் மகிழ்ச்சிவர
இணைவோரை அனுசரிப்பீர்!
மணியான செயலனைத்தும்
மற்றவர்க்கே பலன் கொடுக்கும்!
துணிவோடு செயல்பட்டால்,
தொடர்ச்சியான வெற்றி வரும்!

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

பொதுவாக, உங்கள் ராசிநாதன் சுக்ரனுக்கு, குரு பகை கிரகம் என்பதால், அது எப்படி நற்பலன் கொடுக்கும் என்று நீங்கள் நினைக்கலாம். பகைவனாக இருந்தாலும், நாம் வழிபட்டால், அவன் வழிவிடுவான். நாம் கரம் கூப்பினால், அவன் கரம் கொடுத்து உதவுவான்.

குருவிற்குரிய ஹோமமங்கள் மற்றும் வழிபாடுகளை, குருப்பெயர்ச்சிக்கு முன்னதாகவே மேற்கொண்டு, குழப்பங்கள் அகல வழிவகை செய்து கொள்ளுங்கள். பொதுவாக, இந்த குருப் பெயர்ச்சியால், பயணங்கள் அதிகரிக்கும். பக்கத்தில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வதன் மூலம் அவர்கள் உங்கள் சிக்கல்கள் தீர வழிவகுப்பர். துணிவும், தன்னம்பிக்கையும் உங்களுக்கு தொடர்ந்து வெற்றியைத் தேடி தரும்.

குருவின் பார்வை பலத்தால், வீடு, இடம் வாங்குவதில் இருந்த பிரச்சினைகள் அகலும். தாய்வழி ஆதரவு பெருகும். எதிரிகள் இல்லாமல் போவர். உத்தியோகம், தொழிலில் உன்னத நிலை கிடைக்கும். ஆரோக்கியம் சீராக மாற்று மருத்துவத்தை மேற்கொள்ளுங்கள். ஜோரான வாழ்க்கைக்கு இந்த குருப் பெயர்ச்சி அஸ்திவாரமிட்டுக் கொடுக்கும்.

**ராகு கேது பெயர்ச்சிக் காலம்!**

மே மாதம் 16-ம் திகதி விருச்சிக ராசியில் ராகுவும், இடப ராசியில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள். ஜென்ம கேதுவால் சிறப்பான பலன் கிடைக்குமா? சப்தம ராகு சங்கடங்களைத் தீர்க்குமா? என்று நினைப்பீர்கள். ஜென்ம கேதுவால் ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். குழந்தைகளின் எதிர்கால நலன்கருதி புதிய திட்டங்கள் தீட்டுவது நல்லது. குடும்பச் சுமை கூடும். தொழில் பங்குதாரர்களின் வழியில் தொல்லைகள் ஏற்படலாம்.

சப்தம ராகு நீண்டதூர பயணங்களை ஒரு சிலருக்கு வரவழைத்துக் கொடுக்கும். ஞாபக மறதி உருவாகும். பொல்லாதவர்கள் உங்களை விட்டு அகல எடுத்த முயற்சி வெற்றி தரும். வாழ்க்கைத் துணை வழியே வந்த கசந்த காலங்கள் இனி வசந்த காலமாக மாறும். என்ன இருந்தாலும், ராகு - கேதுக்கள் சர்ப்ப தோஷத்தை உருவாக்கும் சூழ்நிலை இருப்பதால் முறையாக சர்ப்ப சாந்திகளைச் செய்தால் தான் ஏற்ற, இறக்கம் இல்லாத வாழ்க்கை அமையும். லாபங்களும் கைக்கு வந்து சேரும்.

**சஞ்சலம் தீர்க்கும் சனிப்பெயர்ச்சி பலன்கள்**

இதுவரை 5 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த சனி பகவான் 21.12.2011 அன்று துலாம் ராசியில் 6ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். தொழில், உத்யோகம், ஜீவனம், எதிர்ப்பு, வியாதி, கடன் எனப்படும் 6ஆம் இடத்தில் சனி சஞ்சரிப்பது நன்மையே வழங்கும். அதுவும் உச்சம் பெற்ற சனியாக விளங்குகிறார்.

எதிர்ப்புகள் மாறும். கூட்டாளிகள் ஒத்துழைப்போடு கூடுதல் இலாபம் பெற வழி கிடைக்கும். பாசத்தையும், நேசத்தையும் இதுவரை காட்டாத உறவினர்கள் இனி உங்களிடம் காட்டுவர். உடன்பிறப்புக்களின் முன்றேற்றம் கருதி தொகை ஒன்றைச் செலவிடும் சூழ்நிலை உருவாகும். அவர்களின் கல்யாண நிகழ்ச்சிக்கோ, வேலைவாய்ப்புக்களுக்கோ கொடுத்து உதவும் சூழ்நிலை உண்டு. 9, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதி உச்சம் பெறுவதால் தந்தை வழியில் இதுவரை இருந்த பாகப்பிரிவினை இப்போது சுமுகமாக நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும். பழைய தொழிலை விட்டு விட்டுப் புதிய தொழிலைத் தொடங்கும் வாய்ப்பு ஏற்படும். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரும்.

**அக்கறை செலுத்த வேண்டிய வக்ர காலங்கள்!**

வருடத் தொடக்கத்திலேயே சனி வக்கிரமடைகிறார். மீண்டும் பெப்ரவரி மாதத்தில் வக்கிரம் பெறுகிறார்.

## சிவல்புரி சிங்காரம்

2012 மார்ச் மாதம் 26முதல் வருடக் கடைசி வரை கன்னி ராசியில் வக்கிரம் பெறுகிறார். இந்த சனியின் வக்கிர காலத்தில் வளர்ச்சியும் தளர்ச்சியும் மாறிமாறி வந்து கொண்டே இருக்கும். உங்கள் குறைகள் அகல வேண்டுமானால், கூடுதல் விழிப்புணர்ச்சி காட்ட வேண்டியது அவசியம்.

குருவின் வக்ர காலம் 31.08.2011 முதல் 15.12.2011 வரை. இக்காலத்தில் தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். ஏனென்றால் அஷ்டமாதிபதியான குரு வக்ர இயக்கத்தில் இருக்கும் பொழுது அபரிமிதமான நன்மையையே வழங்குவார். தெய்வீகப் பணியில் ஆர்வம் கூடும்.

அசுர குருவையும் தேவ குருவையும் விடாது அடுத்தடுத்த நாட்களில் வழிபாடு செய்து வருவதோடு சிறப்பு தலங்களுக்கு சென்று வழிபட்டு வந்தால் சிக்கல்கள் குறையும். செல்வநிலை உயரும்.

**பலன்தரும் பரிகாரம்**

வெள்ளிக்கிழமை தோறும் விரதமிருந்து தெற்கு நோக்கிய அம்பிகையை வழிபட்டு வந்தால் நல்ல வாய்ப்புக்கள் நாடி வந்து சேரும். (தொடரும்)

# கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் பெருமளவில் பூர்த்தி

## மாவட்ட செயலகம் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் பெருமளவில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட செயலகம் தெரிவித்துள்ளது.

அந்தவகையில் தற்போது கிளிநொச்சி மாவட்டத்தில் சுமார் 40 குடும்பங்கள் வரை மீள்குடியேற்றம் செய்யப்படவேண்டியுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இவர்களை எதிர்வரும் 20 அல்லது 22 ஆம் திகதிகளில் மீள்குடியேற்றம் செய்ய எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறிப்பாக பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் 25 குடும்பங்கள் வரை மீள்குடியே றம் செய்யப்பட வேண்டியுள்ளதோடு கரைச்சி பிரதேச செயலகப் பிரிவிலும் மக்கள் மீள்குடியேற்றப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்தில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளும் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாகவும் மீள்குடியேற்ற நடவடிக்கைகளுக்குத் தேவையான பகுதிகளில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகள் பெருமளவில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் எஞ்சியுள்ள சில பகுதிகளில் காணப்படும் கண்ணிவெடிகளை அகற்றும் நடவடிக்கைகளும் துரிதமாக இடம்பெற்று வருவதாகவும் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

# இந்தியாவிலிருந்து வருகைதரும் சுற்றுலாப் பயணிகள் அதிகரிப்பு

(கொழும்பு)

இவ்வாண்டு முதல் காலாண்டுப் பகுதியில் இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளில் பெரும்பாலானவர்கள் இந்தியாவிலிருந்தே வருகை தந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் விடுக்கப்பட்ட அறிக்கையின் படி, இந்தக் காலப்பகுதியினுள் 37 ஆயிரத்து 476 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், இந்த வருட காலாண்டில் 43.4 சதவீதமாக அதிகரித்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தியாவிற்கு அடுத்ததாக பிரித்தானியா விலிருந்தே அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகள் வந்துள்ள தாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், பாகிஸ்தானில் இருந்து இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை கடந்த காலங்களில் குறைந்த அளவிலேயே அமைந்திருந்தது.

ஆனால், இந்த வருட காலாண்டில் வியக்கத்தக்க வகையில் 3 ஆயிரத்து 829 பாகிஸ்தானிய சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்திருந்தனர்.

இதேவேளை, இந்த வருடத்தில் சர்வதேச ரீதியாக 7 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் இலங்கை வருவர் என மதிப்பிடப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)


# போயா தின ஆன்மீக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சத்தியசாயி சேவா நிலையத்தில் எதிர்வரும் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4.45மணிக்கு நகரசங்கீர்த்தனம் இடம்பெறும்.

அத்துடன் காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் போயா தின நிகழ்வில், காயத்திரி மந்திரம், பஜனை, விசேட சொற்பொழிவு, மங்கள ஆராத்தி என்பன இடம்பெற்று நண்பகல் நாராயண சேவையுடன் நிறைவு பெறவுள்ளது. (ஸ்ரீ-2)


அனைவருக்கும் இனிய
சித்திரைப் புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்



Taste of Jaffna
The culture of pleasure
Authentic ...
- Jaffna Food
- Western Food
- Indian Food
- Chiness Food.

101, Main Street, Jaffna.
Tel:0094 21 222 1322, 0094 21 320 7190,
Fax:0094 21 222 1323



Computer Express
Institute of Information Technology
No.15 ,Sirampiyady lane, off Stanly Road, (Cosy Hotel 2nd floor) Jaffna.
0774907444, 021 222 8250, 0777222422

புத்தாண்டு அதிரடி சிறப்புச்சலுகை

| | | |
|---|---|---|
| Diploma in Microsoft Office 1000/= 3 Months | Diploma in Desktop Publishing 1000/= 4 Months | Diploma in Web Page Designing 1000/= 3 Months |
| Diploma in Graphic Designing 1000/= 4 Months | Diploma in Hardware Engineering 1000/= 3 Months | Diploma in Auto CAD 1000/= 3 Months |
| Diploma in Computer Science 1000/= 4 Months | Honors Diploma in Computer Science 1000/= 3 Months | Advances Courses: Diploma in Video Editing 4Months 1000/=; Diploma in Multimedia 4Months 1000/= |

Batch i - 15-04-2011 - 9AM or 3PM
Batch ii - 16-04-2011 - 11AM or 2PM
Batch iii - 17-04-2011 - 11AM or 2PM
Batch iv - 20-04-2011 - 9AM or 3PM

Diploma in Computerized Accounting
ACCPAC • Quick Book • MYOB
Tally Accounting Package
ஆரம்பம் : 16/04/2011 10AM OR 2PM, 17/04/2011 10AM OR 2PM

மேலும் எமது நிறுவனத்தில்...
Fast track Courses ஆக
1Week course / 1 Month Course
Monday to Friday 9Am to 3.30Pm
Diploma in Auto CAD
Diploma in Hardware Engineering
Course Fee 1000/=
மேலதிக விபரங்களுக்கு எமது நிறுவனத்துடன் தொடர்புகொள்ளுங்கள்...

புதுவருடத்தை முன்னிட்டு, மாணவர்களினதும், கணனி ஆர்வலர்களினதும் நலன்கருதி சிறப்புச்சலுகையாக பதிவுக்கட்டணம் இன்றி கற்கைநெறியை மேற்கொள்ளலாம்.....

DON'T WASTE YOUR TIME, HURRY UP!!
இச்சலுகை 30-04-2011 வரை மட்டுமே பதிவுகளுக்கு முந்துங்கள்



- தபால் மூலம் -
ஆறு மாத கால டிப்ளோமா
Course Length - Six Month
20
APRIL. 2011 TO SEPT.2011
தமிழ் மொழி மூலம்

Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
Dip. in Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Sales & Marketing Management - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி.
Dip. in Health & Hospital Management - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி.
Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோபா
Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்
• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம்
• வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு
• ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile: 0777 140 844, 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி
Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)
ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1st FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848
விண்ணப்ப முடிவுத் திகதி : 28.04.2011



அனைவருக்கும் எமது இனிய தமிழ் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்
மதிகலர்ஸ் பிறிண்டர்ஸ்
உங்கள் இல்லங்களில் நடைபெற இருக்கின்ற மங்களகரமான நிகழ்வுகளுக்கு ...
திருமண அழைப்பிதழ் காட்சியறை
இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 600ற்கு மேற்பட்ட பலவர்ண புத்தம் புதிய டிசைன்களுடன் மலிந்த விலையில் பிறிண்டிங் வசதியுடன் பெற்றுக் கொள்ளலாம்.
MATHI COLOURS PRINTERS
Wedding Card
Show Room



15/2, முருகேசர் லேன், நல்லூர்.
T.P :021-2229285, 077-7222524
web.www.mathicolours.com

## மாநகர சபையினால் கழிவகற்றும் பணிகள்

(கொழும்புத்துறை)

யாழ்நகரில்கழிவகற்றும்பணியை யாழ். மாநகர சபையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக மாலை 6 மணிக்கு பின்னர் யாழ்.நகரைத் தூய்மையாக வைத்திருக்கவும் சுகாதார வசதியை பின்பற்றவும் மாநகர சபையின் சுகாதார தொழிலாளர்கள் தமது பணி களில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இரவோடிரவாக கழிவுப் பொருட்களை உழவு இயந்திரங்கள் மூலம் அகற்றுவதுடன் கழிவு நீர் ஓடும் வாய்க்கால்கள் தினமும் துப்புரவாக்கும் பணிகளும் நடைபெறுவதைக் காண முடிகின்றது.

(ஸ்ரீ-3-51)

## கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கடல் நீரேரி பகுதிகளில் சிறகு வலை உபகரணங்கள் மற்றும் கடல் உணவுகள் திடீர் திடீரென களவாடப்பட்டு வருவதாக பாசையூர் கடற்றொழிலாளர் சங்கத்தினர் யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் வளதிணைக்கள பணிப்பாளரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதற்கமைய யாழ். குடாநாட்டின் கடற்பரப்புகளில் சிறகு வலை, களங்கட்டி வலை, கூட்டு வலை தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் கூட்டம் எதிர்வரும் 28 ஆம் திகதி யாழ்.மாவட்ட கடற் றொழில் நீரியல் வளத்திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் இ.இரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளதாக யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனத் தலைவர் எஸ்.தவரட்ணம் தெரிவித்துள்ளார்.

(ஸ்ரீ-3-51)

## டெங்கு நோயின் தாக்கம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது

(கொழும்புத்துறை)

யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு நோயின் தாக்கம் குறைந்துள்ளதாக யாழ்.மாநகர சபை சுகாதாரப் பிரிவினர் தெரிவித் துள்ளனர்.

குறிப்பாக யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட நூற்றுக்கணக்கான வீடுகள், ஆலயங்கள், வெற்றுக்காணிகள் மற்றும் பாவிக்கப்படாத கிணறுகள் போன்ற சகல இடங்களிலும் யாழ்.மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரப்பிரிவினரால் தொடர்ச்சியான சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இச்சோதனை நடவடிக்கையின் போது டெங்கு நோய்தாக்கம் கட்டுப்பாட்டில் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.குறிப்பாகடெங்கு நோயின் தாக்கம் ஏற்படக் கூடிய பகுதிகளில் புகையூட்டும் நடவடிக்கைகளும் சுத்திகரிப்பு செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-3-51)

## மோட்டார் சைக்கிளில் வந்தோரால் கைப்பைகள் அபகரிப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரில் இருந்து பெருங்குளம் சந்தி வீதியால் துவிச்சக்கரவண்டியில் சென்று கொண்டிருந்த இரு பெண்களது கைப்பைகளை திருடர்கள் அபகரித்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 4.30 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

சம்பவம் குறித்து தெரிய வருவதாவது, கடமை முடிந்து வீட்டுக்குத் திரும்பிக் கொண் டிருந்த பெண்கள் துவிச்சக்கரவண்டிக் கூடையில் கைப்பையை வைத்து சென்ற போது மோட்டார் சைக்கிளில் வந்த நபர் கைப்பையை எடுத்து தப்பிச் சென்றுள்ளார்.

(ஸ்ரீ-3-29)

## பொதுக்கூட்டம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்கவிசேடபொதுக் கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு சாவகச்சேரி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் த.சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி யாணையாளர் கே.அருந்தவநாதன், யாழ். மாவட்ட கால் நடை உற்பத்தி சுகாதார திணைக்கள உதவிப்பணிப்பாளர் திருமதி வ.அமிர்தலிங் கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலன் தென்மராட்சி கால்நடை வைத்திய அதிகாரி க.இரகுநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இக்கூட்டத்திற்கு சகல அங்கத்தவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்க செயலாளர் செ. சுப்பிரமணியம் அறிவித்துள்ளார்.

(ஸ்ரீ-3-29)

## சேஷ்டைகள் புரிந்த குழுவினர் எச்சரிக்கையின்பின் விடுதலை

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணத்தில் புதுவருடத்திற்கு பொருட்கள் கொள்வனவு செய்ய வந்த மக்களிடம் கொள்ளை முயற்சி மற்றும் சேஷ்டைகள் புரிந்த குழுவினர் பிடிக்கப்பட்டு எச்சரிக்கையின் பின் விடுவிக்கப்பட்டனர்.

இச்சம்பவம்யாழ்ப்பாணம்முனீஸ்வரன் வீதிப்பகுதியில் நேற்று இடம்பெற்றுள்ளது.

மக்கள் நெரிசலாக காணப்படும் பகுதிகளில்சில விசமிகள் வேண்டுமென்றே சில முறைகேடுகளில் ஈடுபட்டு வருவதாகவும் இத்தகையோரல் வியாபாரிகளும் பொது மக்களும் அசௌகரியங்களை அடைவ தாகவும் தெரிவிக் கப்படுகின்றது.

(ஸ்ரீ-3-51)

## தவக்காலத்தை முன்னிட்டு சிலுவைப் பாதைப் பேரணி

(கொழும்புத்துறை)

தவக்காலத்தை முன்னிட்டு இயேசுவின் திருப்பாடுகள் தியானிக்கும் சிலுவைப் பாதைப் பேரணி பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்திலிருந்து மணியந்தோட்டம் கர்த்தர் கோவிலை சென்ற டையவுள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை மாலை 4மணிக்கு பாசையூரில் ஆரம்பமாகும் வீதிச்சிலுவைப் பாதை கடற்கரை வீதி,துண்டி வீதி, கொழும் புத்துறை வீதி வழியாக மணியந்தோட்டம் கர்த்தர் கோவிலை சென்றடைந்து பாசை யூர்ப்பங்குத்தந்தை அருட்திரு றோய் பேடி னன் அடிகள் தலைமையில் திருப்பலி நடை பெறவுள்ளது.

குறிப்பாக மணியந்தோட்டத்தில் மக்கள் மீளக்குடி யேறியமையைத் தொடர்ந்து கடந்த 15 வருடங்களின் பின்னர் மாபெரும் வீதிச் சிலுவைப்பாதை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ஸ்ரீ-3-51)

## வலைப்பந்தாட்ட போட்டி முடிவுகள்

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலய பாடசாலைகளிடையே நடைபெற்ற பெண்களுக்கான வலைப் பந்தாட்ட போட்டியின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

15 வயதுப் பிரிவில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி சம்பியனாகியுள்ளது. இரண் டாம் இடத்தை கொடிகாமம் திருநாவுக்கரசு அணியும் 3 ஆம் இடத்தை வரணி மகா வித்தி யாலய அணியும் பெற்றுக் கொண்டன.

17 வயதுப் பிரிவில் கொடிகாமம் திருநா வுக் கரசு மகாவித்தியாலய அணி சம்பிய னாகியுள்ளதுடன் 2 ஆம் இடத்தை சாவகச் சேரி இந்துக்கல்லூரி அணியும் 3 ஆம் இடத்தை சாவகச்சேரி மகளிர் கல்லூரி அணியும் பெற்றுக் கொண்டன. 19 வயதுப் பிரிவில் கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலய அணி சம்பியனாகியுள்ளதுடன் மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலய அணி 2 ஆம் இடத்தையும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டன.

இவ்வணிகள் அனைத்தும் மாவட்டமட்டத்தில் நடைபெறவுள்ள விளையாட்டுப் போட்டிகளுக்கு தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ஸ்ரீ-3-29)

## தேர்த்திருவிழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் தெற்கு அருள் மிகு சந்திரசேகரப் பிள்ளையார் ஆலய தேர்த்திருவிழா இன்று வியாழக் கிழமை காலை7.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இத் தேர்த்திருவிழாவை யொட்டிய சிறப்பு நிகழ்வாக ''மஹோற்சவத்தில் இரதோற்சவம்'' எனும் தலைப்பில் ஆசிரியர்.மதுரகவி. காரை எம்.பி அருளானந்தன் சிறப்புச் சொற்பொழி வாற்றுவார்.

(3)

◆◆◆◆◆

நுணாவில் மேற்கு கொல்லங்கிராய் வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா இன்று வியாழக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

தொடர்ந்து நாளை வெள்ளிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நாளை மறுதினம் சனிக்கிழமை பூங்காவனத்திருவிழாவுடன் நிறைவு பெறவுள்ளது.

(ஸ்ரீ-3-29)

## பரிசுத்த வார வழிபாடுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மரியன்னை பேராலய பரிசுத்த வார வழிபாடுகள் நடை பெறவுள்ளன.இதில் குருத்து ஞாயிறு வழிபாடுகள் எதிர்வரும் 17 ஆம் திகதி நடைபெறும். இதில் காலை திருப்பலி 6 மணிக் கும், 7.30 மணிக்கும் மாலைத் திருப்பலி 4.30 மணிக்கும் மறுநாள் திங்கட்கிழமை தைலமந்திரிப்புத் திருப்பலி மாலை 4.30 மணிக்கும் நடைபெறவுள்ளது.

அத்தோடு பெரியவியாழன் வழிபாடுகள் மாலை 5 மணிக்கும் இரவு ஆராதனை இரவு 10 மணிக்கும் மறுநாள் பெரியவெள்ளி சிலுவைப் பாதை காலை 6.30 மணிக்கும் மாலை வழிபாடுகள் பி.ப 4 மணிக்கும் நடைபெற வுள்ளது.

புனித சனி ஏழுவார்த்தைகள் தியானம் காலை, 6.30 மணிக்கும் திருவிழிப்பு வழி பாடுகள் இரவு 10.30 மணிக்கும் மறுநாள் உயிர்த்த ஞாயிறு முதல்திருப்பலி காலை 5.45 மணிக்கும் இரண்டாம் திருப்பலி காலை 7.15 மணிக்கும் நடைபெறவுள்ளது.

(ஸ்ரீ-3)




# இன்று ஒரு தகவல்

## கடவுளின் குரலும் சாத்தானின் குரலும்

ஒரு பெரிய கடல். அதில் ஒரு பெரிய படகு சென்று கொண்டிருந்தது. அந்தப் படகில் பெரியவர் ஒருவர் உட்கார்ந் திருக்கிறார். அவர் ஒரு சந்நியாசி. அதே படகில் இன்னும் சில பேர் பிரயாணம் செய்து கொண்டிருந்தார்கள்.

அவர்கள் அனைவரும் அந்த சந்நியாசியைக் கேலி செய்வது... கிண்டல் செய்வது... அவர் மௌனமாக அமர்ந்திருந்த போது ஆ...ஊ... என்று சத்தம் போடு வது... இப்படியே வந்து கொண்டிருந்தார்கள்.

இவர்கள் செய்த தொந்தரவுகளைப் பற்றி அந்தப் பெரியவர் சிறிதும் கவலைப்படவில்லை... அவர் பொறு மையாக வந்து கொண்டிருந்தார்.

இதற்குள் மாலை சாய்ந்து இருள் சூழ ஆரம்பித்தது. அந் தப் பெரியவர் கண்களை மூடி தியானத்தில் அமர்ந்திருந்தார்.

இதைப் பார்த்த ஒருவன்,'' டேய்... இது சாது, இப்போது தியானத்தில் இருக்கிறார். இது தான் நாம் வம்பு வளர்ப்பதற்கு சரியான நேரம்'' என்று கூறினான்.

அதற்கு மற்றொருவன் ஆமாம் என்றான். உடனே எல்லோரும் சேர்ந்து அந்த சந்நியாசியை கிண்டல் செய்து கன்னாபின்னா என்று பேச ஆரம்பித்தார்கள்.

ஆனால் பெரியவரின் கவனம் இவர்கள் மீது திரும் பவே இல்லை. கீழே கிடந்ததையெல்லாம் எடுத்து அவர் மீது போட்டுப் பார்த்தார்கள். அப்போதும் அவர் அசை யவே இல்லை. ஒருவன் கீழே கிடந்த காலணியை எடுத்து அவரது தலையில் அடித்தான். அப்போதும் அந்த சாது தியானத்திலேயே இருந்தார். அவரது முகம் அன்பாகவும் அமைதியாகவும் இருந்தது.

இந்தச் சம்பவத்தில் ஆகாயத்தில் இருந்து ஒரு குரல் அதாவது அசரீரி ஒலித்தது. அக்குரல்,'' என்னுடைய அன்புக்குரிய சாதுவே... நீ விரும்பினால் இந்தப் படகை நான் கவிழ்த்து விடுகிறேன்!'' என்று கூறியது.

அசரீரி ஒலித்த போது சாதுவின் தியானம் மெல்லக் கலை யும் நிலையில் இருந்தது. அவரது கண்கள் மூடியபடியே இருந்தன. ஆனால் அவரைக் கேலி செய்தவர்களும் அடித்தவர்களும் இந்தக் குரலைக் கேட்டுப்பயந்தார்கள்.

"இந்த சாது,'சரி! என்று ஒரு வார்த்தை சொன்னால் போதும்; இந்தப் படகையே க்விழ்த்து விடுகிறேன்! என்று அல்லவா இந்த அசரீரி சொல்கிறது... இவர் சரி என்று சொல்லி அதனால் படகு கவிழ்ந்து விடுமானால் நம் கதி என்ன ஆவது என்று அவர்கள் யோசித்தார்கள்.

' விளையாட்டு வினையாகி விடும் போல் உள்ளதே!' என்று நினைத்து மிகவும் பயந்து போய் விட்டார்கள், உடனே எல்லோரும் அந்தப் பெரியவரின் காலில் விழுந்து "ஐயா! எங்களை மன்னித்து விடுங்கள், ஏதோ தெரியா மல் தவறு செய்து விட்டோம்'' என்று பரிதாபமாகக் கெஞ்சிக் கேட்டார்கள்.

சாதுவின் தியானம் முடிந்தது. மெதுவாகக் கண் திறந்து பார்த்தார். சுற்றிலும்... பயந்த முகத்துடன் மனிதர்கள். அவர்களின் உடம்பு நடுங்கிக்கொண்டி ருந்தது. அவர்களை அந்தப் பெரியவர் கவலைப்படா தீர்கள் என்று கூறி அமைதிப்படுத்தினார்.

அதன் பின்னர் அவர் நிமிர்ந்து ஆகாயத்தைப் பார்த்து, கைகளை உயர்த்திப் பேச ஆரம்பித்தார்.

" என்னுடைய அன்பான கடவுளே! நீங்கள் சாத்தா னின் மொழியில் ஏன் பேசுகிறீர்கள்? நீங்கள் கவிழ்த்து விளையாட வேண்டும் என்று நினைத்தால் அதற்காக இந்தப் படகைக் கவிழ்க்க வேண்டாம்.

" நீங்கள் புரட்டித் திருப்ப வேண்டியது இந்தப் படகை இல்லை... இந்த மனிதர்களுடைய புத்தியை! புத்தியைத் திருப்பாமல் படகைத் திருப்புவதில் என்ன பிரஜோசனம் என்று வினவினார்.

உடனே ஆகாயத்திலிருந்து பதில் வந்தது...

" என் அன்புக்குரியவனே... நான் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன். நீ உண்மையைச் சரியாகப் புரிந்த கொண்டாய். சிறிது நேரத்திற்கு முன்னால் ஒலித்தது என்னுடைய குரல் அல்ல. அது சாத்தானின் குரல்... எவன் ஒருவன் சாத்தானின் குரலைப் புரிந்து கொள்கி றானோ அவனே என் குரலையும் புரிந்த கொள்ள முடியும்!'' என்று அந்தக் குரல் கூறியது.

யார் என்ன பேசினாலும் அது பிறருக்கு நன்மை தருவதாக இருந்தால் அதைக் கடவுளின் குரல் என்று நாமே எடுத்துக் கொள்ளலாம்.பிறருக்கு தீமை விளை விக்கும் சொல்லும் செயலும் சாத்தானுக்கே உரியது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த 95 வீதமான மக்கள் மீள்குடியேற்றம்

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்த 95 வீதமான மக்கள் மீள் குடியேற்றப்பட்டுள்ளதாக அரசாங் கம் அறிவித்துள்ளது.

யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்த வடக்கு-கிழக்கு மக்களில் இன்னமும் 5 வீதமானவர்களே எஞ்சி யிருப்பதாகக் குறிப்பிடப்படுகின்றது.

கிளிநொச்சி, மன்னார், முல்லைத் தீவு, வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் சேதமடைந்த வீடுகளை திருத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் டி.எம்.யூ.டி பஸ் நாயக்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் மீள் குடியேற்றத் திட்டத்தின் மூலம் 2 இலட்சத்து 52 ஆயிரம் பேர் இது வரையில் தமது சொந்த இடங்களில் மீள் குடியேற்றப்பட்டுள் ளதாக குறிப்பிட்டுள் ளார்.

நிலக்கண்ணி வெடிகள் அகற் றப்பட்டதன் பின்னர் எஞ்சிய பிர தேசத்தில் உடனடியாக மக்கள் மீள் குடியேற்றப்படுவர் எனு தெரிவிக்கப் படுகின்றது. (ஸ்ரீ-2)

# கனேடிய குடிவரவு கொள்கை திருப்திகரமானதாக இல்லை

## புலம்பெயர் தமிழ்மக்கள் தெரிவிப்பு

கனேடிய அரசாங்கம் தற்போது பின்பற்றுகின்ற குடிவரவு கொள்கை திருப்திகரமானதாக இல்லை என புலம்பெயர்ந்து கனடாவில் வாழ்கின்ற தமிழ் மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். எனவே நிலையான குடிவரவு முறைமை ஒன்றை பின்பற்ற வேண்டும் என புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் கோரியுள்ளனர்.

கனடாவில் தற்போதைய அரசாங்கம் பின்பற்றி வருகின்ற குடிவரவு முறைமை திருப்தியளிப்பதாக இல்லை என இது தொடர்பிலான புலம்பெயர்ந்த அமைப்பின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் தெளிவான வினைத்திறனான குடிவரவு திட்டம் ஒன்றை கனடா பின்பற்ற வேண்டும் என அவர்கள் கோரியுள்ளனர். (ஸ்ரீ-2)

# விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தால் ஆதனவரி மதிப்பீட்டுப் பணிகள்

(யாழ்ப்பாணம்)

விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தால் ஆதனவரி மதிப் பீட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக யாழ். மாவட்ட விலை மதிப்பீட்டுத் திணைக்கள அதிகாரி எஸ்.ஜெகநாதன் தெரி வித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட கொக்குவில், நல்லூர் உப அலுவலகங்களினால் ஆதனவரி மதிப்பீடு இடம்பெற்று வருவ தோடு வலிகாமம் தெற்கு பிரதேச சபைக்குட்பட்ட உடுவில், ஏழாலை ஆகிய உப அலுவலகங்களின் பணிகள் முடிவடையும் தறுவாயிலுள்ளது.

அத்துடன் யாழ். மாவட்டத்தில் பல உப அலுவலகங்களுக் குட்பட்ட பகுதிகளிலும் ஆதனவரி மதிப்பீடு இடம்பெற்று வரு கிறது. இதற்கென 15 பேர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-6)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 120 | 60 |
| உருளைக்கிழங்கு | 75 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 70 | 100 | 100 |
| தக்காளி | 70-80 | 100 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 50 |
| கோவா | 75-80 | 80 | 90 |
| கரட் | 120 | 180 | 180 |
| பூசணி | 50 | 50 | 50 |
| புடோல் | 30 | 50 | 50 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 110 | 120 | 130 |
| பெரிய வெங்காயம் | 60 | 80 | 75 |
| பாகற்காய் | 100 | 140 | 80 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | -- | 80 | - |
| பயற்றங்காய் | 70-80 | 100 | 80 |
| லீக்ஸ் | 100 | 120 | 100 |
| பீற்றூட் | 60 | 80 | 60 |
| கறிமிளகாய் | 120 | 150 | 100 |
| முருங்கைக்காய் | 550 | 600 | 500 |
| போஞ்சி | -- | 140 | - |
| கத்தரிதம்புள்ள | 40 | 60 | 50 |
| கீரை - 1 பிடி | 12 | 30 | 20 |
| தேசிக்காய் | 70 | 70 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50-60 | 50 |

# இராசி பலன்

*14.04.2011*
*(சித்திரை 01 , வியாழக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு*
*ஏகாதசி மாலை 6.33 மணிவரை*
*மகம் முன்னிரவு 8.19 மணிவரை*
*இராகுகாலம் 1.35-3.05 மணிவரை*
*சுபநேரம் 7.35-9.05 மணிவரை*
*தமிழ்,சிங்கள புதுவருடப்பிறப்பு, ஏகாதசி விரதம், அமிர்தசித்தம்*

**மேடம்** இனிமையான நாள், இல்லம் தேடி நல்ல செய்திகள் வந்து சேரும், பிள்ளைகள் வழியில் நன்மையுண்டு, அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முன்வருவீர்கள்.

**இடபம்** தாய்வழி உறவில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும், உறவினர் கள் வருகையுண்டு, ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரும், எதிர் பார்த்த தேவைகள் நிறைவேறும்.

**மிதுனம்** உள்ளொன்று வைத்து புற மொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், நல்ல நண்பர்களின் தொடர்பால் நலம் காண வேண்டிய நாள்

**கடகம்** நன்மைகள் நடைபெறும் நாள், பெருமைப்படும் வகையில் சில சம்பவங்கள் நடைபெறலாம், தொழிலில் எதிர்பார்த்த நன்மை களுண்டு, விருந்துபசாரத்தில் கலந்து மகிழ்வீர்கள்.

**சிங்கம்** விருப்பங்கள் நிறைவேற விஷ்ணுவை வழிபடவேண்டிய நாள், அனுபவத்தின்வாயிலாக சில தகவல்கள் அறிவீர்கள், ஆரோக் கியத்தில் கவனம் தேவை.

**கன்னி** விருந்து விழாக்களில் கலந்து மகிழ்வீர்கள், சுபசெலவுகள் அதிகரிக்கும் நாள், அலைச்சல் சற்று அதிகரிக்கும், சயனசுகக் குறைவு

**துலாம்** எடுத்த காரியம் கைகூடும், புதிய பொருட்கள் வந்து சேரலாம், பெருமையடைய வேண்டிய நாள், உறவினர் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள்.

**விருச்சிகம்** ஆத்மீக ஈடுபாடு அதிகரிக்கும், தூரதேச செய்திகள் மனங்குளிர வைக்கும், போகன சுகமுண்டு, ஆரோக்கியமான நாள், முயற்சிகள் கைகூடும்

**தனுசு** தடைகள் விலகி காரியங்கள் நடைபெறும், கணவர், மனைவி யிடையே ஏற்பட்ட மனஸ்தாபம் விலகும், சாமர்த்தியமான பேச் சால் சாதனை படைக்கும் நாள்.

**மகரம்** கவலைகள் குறைய கண்ணனை வழிபட வேண்டிய நாள், சிலர் பாராட்டுவது போல விமர்சிக் கலாம், உடல் நலனில் கூடிய கவன மெடுக்கவேண்டிய நாள்.

**கும்பம்** இனிய அனுபவங்கள் ஏற்பட லாம், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் சூழ்நிலை அமைய லாம், தெய்வகடாட்சம் உண்டு, உறவினர்,நண்பர்கள் சந்திப்புண்டு.

**மீனம்** ஆரோக்கியம் சீராகி உற்சாக மடைவீர்கள், விருந்துபசாரத் தில் கலந்து சிறப்படையும் நாள், பகைவர்கள் நண்பராக லாம், கௌரவமான நாள்.

வளவன்

# சித்திரை புத்தாண்டு சிறப்பு மலர்-14.04.2011

இனிய சித்திரை புதுவருட வாழ்த்துக்கள்

## நித்தியா நகை மாடம்



உரிமையாளர்: நா.ருதஸ்குமார்

**Niththiya Jewellery**

நவீன வடிவமைப்புக்களில் அழகிய தங்க நகைகளை செய்து பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஸ்தாபனம்

177C, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0772844832
Email: jena0088@gmail.com

இனிய சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்

தரம் நாடுவோர் தவறாமல் நாடுமிடம்

## ரூபி நகை மாளிகை



111/1 (227) கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே - 021 222 2828
021 222 9038

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

## கஜமுகன் ஹாட்வெயர்





இல.147, 149, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 222 2833

கர வருட புத்தாண்டு அனைவரின் வாழ்விலும் இன்பம் பொங்க வாழ்த்துகிறோம்


## இ.ச.பே.நாகரத்தினம் சக நிறுவனம்

துவிச்சக்கர வண்டிகள், அதன் உதிரிப் பாகங்கள், தொலைக்காட்சிப் பெட்டிகள், டிஸ் அன்ரனா வகைகள்என்பவற்றை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்



52, 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 222 3096

அனைவருக்கும் இனிய சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்



## நியூ அசோகா

**அலுமினியப் பிற்றிங் சென்ரர்**

Work Shop:- மயிலணி வடக்கு, சுன்னாகம்

உங்கள் சகல விதமான அலுமினியப் பிற்றிங் வேலைகளையும் உத்தரவாதத்துடன் செய்து பெற்றிட எம்மை அணுகவும்.

63, கே.கே.எஸ்.வீதி,
சுன்னாகம்.

தொ.பே.இல: 021 2240331
077 3609034

# இந்துக்களும் பௌத்தர்களும் கொண்டாடும் கர புதுவருடம்

சூரிய, சந்திரர்களின் சஞ்சாரங்களைவைத்தே காலங்கள் கணிக்கப்படுகின்றன. இக்கால அளவு அல்லது மானம் ஒன்பது வகைப்படும். அவை பிரம்ஹமானம், தைவமானம், பைத்தருமானம், பிராஜபத்யமானம், கௌரவஅல்லது பர்ஹஸ்பத்தியமானம், சௌரமானம், ஸாவனமானம், சாந்திரமானம், நாட்சத்திரமானம் என்பனவாகும். இவற்றில் முதல் ஐந்து மானங்களும் பிரம்ம தேவர்கள், பித்துருக்கள் சம்பந்தப்பட்டவை. கடைசி நான்கு மானங்கள் மட்டுமே நம் வாழ்வுக்கு பயனுள்ளவை. நம் பாரத வருஷத்தில் சௌரம், சாந்திரம், ஸாபனம், நாட்சத்திரம் ஆகிய நான்கு மானங்களாலே (காலங்கள்) அனைத்துக் கருமங்களும் நடக்கின்றன. தர்ம சாஸ்திரங்களும் இதனையே அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன.

சௌரமானம் சூரியபகவான் மேடராசி முதல் மீனராசிவரை சஞ்சரிப்பதால் ஏற்படுவதாகும். சூரியன் ஒரு ராசியில் இருந்து இன்னொரு ராசிக்குச் செல்வது மாதசங்கிரமணம் (மாதப்பிறப்பு) எனப்படும். ஆகையால் சித்திரை முதல் பங்குனி வரையுள்ள மாதங்கள் சௌர மாதங்களாகும்.

சூரிய பகவான் மேடராசியில் பிரவேசிக்கும் தினமே சித்திரை வருடப்பிறப்பு ஆகும். ராசிகளில் முதலாவதாக அமைவது மேடராசியாகும்- ஆகவே இதுவே வருடத்தில் தொடக்கமாதமாகிறது. கிறிஸ்தவ, இஸ்லாமிய ஆக்கிரமிப்புக்கள் உலகில் ஏற்படுவதற்குமுன் இவ்வருடப் பிறப்பையே உலகம் முழுவதும் ஏற்றுக்கொண்டு அதனை நடைமுறைப்படுத்தியும் உள்ளனர். இவ்வருடத்தை சௌரவருடம் என்று அழைப்பர். அதாவது மேடராசியின் தொடக்கமாகிய அச்சுவினி நட்சத்திரத்துக்கு சூரியன் பிரவேசிக்கும் காலம்தொட்டு மீனராசியின் அந்தமான ரேவதிநட்சத்திரத்தில் இருந்து விலகும் வரை உள்ள காலமே ஆகும். கரவருடம் (14-4-2011) முற்பகல் 11.33இற்கு வாக்கிய பஞ்சாங்கப் படியும். பகல் 1.00இற்கு திருக்கணிதப் பஞ்சாங்கப்படியும் பிறக்கின்றது. எப்பஞ்சாங்கத்தின்படி எவரெவர் அனுஸ்டிக்க விரும்புகின்றாரோ அதன்படி அவரவர் அனுஸ்டித்துக் கொள்ளலாம்.

எது எவ்வாறிருப்பினும் பௌத்தர்களும் இந்துக்களும் இந்நாளை வருடப்பிறப்பாக ஏற்றுக் கொண்டாடுவது தமிழ், சிங்கள மக்களிடையேயுள்ள சகோதரத் தன்மைக்கு கிடைத்த ஆத்மீக வரப்பிரசாதமாகவே இதனைக் கருத வேண்டியுள்ளது.

பிரம்மதேவர்கூட தனது சிருஷ்டியை சித்திரைப் புத்தாண்டிலேயே ஆரம்பித்தார் என்பது இந்துக்களின் ஐதீகம். உலகில் வாழும் அனைத்து இந்துக்களும் இந்நாளை மகிழ்ச்சிகரமாகக் கொண்டாடும் வேளையில் அம்மகிழ்ச்சியில் பௌத்தர்களும் இணைந்து கொள்ளும் தன்மை இங்கு இயல்பாகவே காணப்படுகின்றது. அனைத்து மக்களும் சகோதரர்களாக வாழுவதற்கு வழி கிடைக்கவேண்டும். இதற்கு இறைவன் திருவருள் கிட்ட வேண்டும். என இந்நாளில் அனைவரும் பிரார்த்திப்போமாக. 'எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இந்நாடே அவர் சிந்தையுள் ஆயிரம் எண்ணம் வளர்ந்து சிறந்ததும் இந்நாடே' என்ற மன உணர்வு மீளெழுச்சி பெறவேண்டிய நாளிது. இந்நாட்டை வழிநடத்தும் ஆத்மீகத் தலைவர்களும் அரசியல் தலைவர்களும் இதனை ஓர்கணம் சிந்திப்பது சாலப்பொருத்தமான தாகும்.

இந்து தர்மம் வாழ்க்கை நெறியாகவே அமைகிறது. இந்து ஒருவன் பிறப்பதற்குமுன் இருந்து (கருவாகி இருந்த காலம்தொட்டு) பிறந்து இறந்த பின்பும் அவனை அத்தர்மம் பற்றிநிற்பதை பிறக்கமுன் தொடக்கம் இறந்த பின்வரை ஆற்றுகின்ற கிரியைகளிலிருந்து அறியமுடிகிறது.

சித்திரைமாத வருடப்பிறப்பு அன்று விஷு புண்ணிய காலத்தில் மருத்துநீர் தேய்த்துத் தோய்ந்து கர்மானுஸ்டானங்களைத் தொடங்க வேண்டும் என பக்திநூல்கள் சொல்லுகின்றன. இத்தகைய வாய்ப்பு இந்துக்களையும் பௌத்தர்களையும் தவிர வேறு எந்த மதத்தினருக்கும் கிடையாது என்பது வெளிப்படை.

மருத்துநீர்- தாளம்பூ, தாமரைப்பூ, மாதுளம்பூ, விஸ்ணுகிராந்தி, சீதேவியார் செழுங்கழுநீர், வில்வம், அறுகு, பீர்க்கு, சோளம், கோமயம், மஞ்சள், சுக்கு, மிளகு, திப்பிலி ஆகியவற்றை சுத்த ஜலத்தில் காச்சி பெற்றுக் கொள்ள முடியும்.

புத்தாண்டை வைத்தே பஞ்சாங்கங்கள் அனைத்தும் கணிப்புக்களை மேற்கொள்கின்றன. ஆகையால் அத்தினத்தில் புதுவருடப்பலன்களை பார்ப்பதும் அப்பலன்களுக்கு அமைவாக திட்டங்களைத் தீட்டுவதும் புதியகாரியங்களைப் புண்ணிய காலங்களில் ஆரம்பிப்பதும் மரபாகிவிட்டது. இது இந்துக்களிடையே பண்டுதொட்டு இருந்துவந்த திட்டமிடல் சம்பந்தமான செயற்பாட்டை வெளிப்படுத்தி நிற்கின்றது. எக்காரியத்தையும் மங்களகரமானதாக தொடங்கவேண்டும் எனும் நோக்கில் ஆலயமணியோசைகளும், பூஜைகளும், வழிபாடுகளும், மங்கள வாத்திய இன்னிசைகளும், வேத கீதங்களும், திருமுறை ஒலிகளும் வேள்விப்புகைகளும், காற்றில் மிதக்கக்கூடிய வகையில் இந்நாளை அமைத்துக்கொள்வது அனைத்து இந்துக்களின் கடமையாகும்.

சி.சக்திகிரீவன்.
செயலாளர்.
இந்துசமயப்பேரவை.

இந்நாளில் அதிகாலை எழுந்து மருத்து நீர் தேய்த்து தோய்ந்து ஆன்மார்த்த, பரார்த்த பூஜைகளை நிறைவு செய்து கொண்டு வீட்டு முற்றத்தை அலங்கரித்துச் சூரிய பகவானுக்கு பொங்கல் இட வேண்டும். பின்னர் கோயிற் பிரசாதங்களையும் வீட்டுப் பட்சணங்களையும் தாராளமாக பரிமாறி உண்டு மகிழ்வது வழக்கமாகிறது. கைவிசேட காலத்தில் கைவிசேடங்களை வழங்கி மகிழ்வதும் தொழில்களை ஆரம்பிப்பதும் வழக்கமாக இருந்து வருகிறது.

இந்நாளில் இடம்பெறும் விருந்தில் அறுசுவை கலந்த உணவுகளைப் பரிமாறி மகிழ்வர். வாழ்க்கை இன்பதுன்பங்கள் கலந்தவையாகவே அமையும் என்பதை உண்ணும் போதும் எமக்குப் புலப்படுத்துவது போல் அமைகிறது.

தாய்தந்தையர், குரு, முதியோர் ஆகியோரை வணங்கி ஆசி பெறுவது எமது எதிர்கால வாழ்க்கையை உறுதியுடன் எதிர்கொள்வதற்கு துணைநிற்கிறது.

# ஆனந்தத்தின் வழி



ஆன்மீகம் 24

வழி ஒன்றுதான்

'கவலைப்படாதீர்கள்; மகிழ்ச்சியாக இருங்கள்' கவலைப் படாதீர்கள்; மகிழ்ச்சியாக இருங்கள். இது உங்களுக்குச் சிறிதும் பயனளிக்கவில்லை. ஏனென்றால், இதை உங்கள் வாழ்க்கையில் ஒரு கொள்கையாக மாற்றுவதற்கு முயற்சிக்கிறீர்கள்.

நீங்கள் சார்ந்திருப்பவைகளைப் பற்றி உங்களால் எப்படிக் கவலைப் படாமல் இருக்கமுடியும்? 'கவலைப் படாதே, மகிழ்ச்சியாய் இரு' என்று நீங்கள் எப்பொழுது சொல்லிக் கொள்கிறீர்கள்? எப்பொழுதெல்லாம் உங்கள் மனம் உங்கள் கட்டுப்பாட்டையும் மீறி ஒரு குறிப்பிட்ட எண்ணச் சுழற்சியில் சிக்கிக் கொள்கிறதோ, இதற்குப் பெயர்தான் கவலை. அப்போதுதான் நீங்கள் இப்படிச் சொல்லிக்கொள்கிறீர்கள்.

கவலை என்பது ஏதோ ஒன்றைப் பற்றி மீண்டும் மீண்டும் சிந்தித்து, அந்த எண்ணச்சுழற்சியில் சிக்கிக் கொள்வதுதான். ஏதாவது ஒன்றைப் பற்றிச் சிந்திப்பதற்கு பெயர் 'கவலை' அல்ல. நீங்கள் தெளிவான சிந்தனையைக் கொண்டிருப்பது நல்லது. ஆனால் ஒன்றைப்பற்றியே மீண்டும் மீண்டும் சிந்தித்துக் கொண்டிருப்பீர்களேயானால், அதுதான் கவலை. அப்படியானால் உங்கள் மனமும் ஒரு கீறல் விழுந்த ரெக்கார்ட்டைப்போல ஆகிவிட்டது, அது மீண்டும்மீண்டும் சொன்னதையே சொல்லிக்கொண்டிருக்கிறது.

இது உங்கள் மனநிலை சரியில்லாததையே காட்டுகிறது. உங்கள் வாழ்க்கையில் ஏதாவது ஒரு நிகழ்வு உங்களை வெகுவாக பாதித்ருக்கக்கூடும்; புண்படுத்தியிருக்கக்கூடும். அதனால்தான் அதைச் சுற்றியே உங்கள் சிந்தனை உழன்று கொண்டிருக்கிறது. ஒரு கீறல்விழுந்த ரெக்கார்டைப்போல, உங்கள் மனம் மீண்டும்மீண்டும் சொன்னதையே சொல்லிக் கொண்டிருக்கிறது. நீங்கள் எங்கு சென்றாலும் சரி... அதையே தான் உங்கள் மனம் சுற்றிச்சுற்றி வருகிறது.

ரெக்கார்டை சரி செய்வதற்குப் பதிலாக, அல்லது அதை நிறுத்தி விடுவதற்குப்பதிலாக, இப்போது நீங்கள் வேறொரு ராகத்திற்கு மாறிவிடு கிறீர்கள். ஒரு சிந்தனையிலிருந்து தப்பிக்க, உங்கள் மனம் வேறொரு சிந்தனையைப் பற்றிக்கொள்கிறது. முதலில் இது உங்களுக்கு ஆறுதலாக தெரிந்தாலும், காலப்போக்கில் இது உங்களை மேலும் விரக்தியடையச் செய்கிறது.

ஒரு காலத்தில் மிகவும் பிரபலமாகப் பேசப்பட்ட நேர்மறைச் சிந்தனையை (positivethinking) உங்களுக்குக் கற்றுக்கொடுக்க பலர் முயற்சித்திருப்பார்கள். அவர்கள் வாழ்க்கையில் இன்னும் அடிபடவில்லை. 'கவலைப்படாதே; மகிழ்ச்சியாக இரு,' 'எது நடந்தாலும் அது நல்லதிற்கே' 'நான் சரி; நீயும்சரி, அனைத்தும் சரியாகிவிடும்', இது போன்ற பல போதனைகள் உங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும்.

நேர்மறை சிந்தனையைப் போதித்தவர்களே பின்னாளில் தங்கள் மனதை இழந்து, தற்கொலையும் செய்து கொண்டார்கள். ஏனென்றால் அவர்களுடைய இந்தக் கோட்பாடு ஆரம்பத்தில் மட்டுமே சிறிதளவு பயனளித்தது. அது வாழ்க்கையின் அனைத்துப் பரிமாணங்களிலும் பலனளிக்கவில்லை; இதை நீங்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். இந்தப் படைப்பிற்கு ஆதாரமாக விளங்கும் உண்மையைத் தவிர வேறுஎதுவும் வாழ்க்கையின் அனைத்துப் பரிமாணங்களிலும் பலனளிக்க முடியாது. நல்வாழ்வை அளிக்கவல்லது என்று உங்களை நீங்களே பல வழிகளிலும் ஏமாற்றிக் கொள்ள முடியும். ஆனால், இவை எதுவுமே நிலைக்காது.

'கடவுள் தான் ஒரே வழி' என்று மக்கள் கூறியதற்கும் இதுதான் காரணம். அவர்கள் உங்கள் கடவுள், என் கடவுள், இந்தக் கடவுள், அந்தக்கடவுள், அல்லது மேலே மேலே அமர்ந்திருக்கும் யாரோ முட்டாள்... இவர்களைக் குறிக்க வில்லை. இந்தப் படைப்பிற்கு ஆதாரமாய் இருப்பது கடவுள். உங்கள் படைப்பின் மூலமானது எங்கே யிருப்பதாக, தற்போது உங்கள் அனுபவத்தில் உணர்கிறீர்கள்? உங்களுக்குள்ளேயா... அல்லது வெளியிலா? கண்டிப்பாக உங்களுக்கு உள்ளேதான், இல்லையா? இந்த உடலின் வளர்ச்சியே உங்களுக்குள் இருந்துதான் நடக்கிறது. ஆக இந்தப்படைப்பின் மூலமே உங்களுக்குள்தான் இருக்கிறது. அதைத்தான் நானும் சொல்கிறேன். உங்கள் இருப்பின் ஆதாரமும், இந்தப்படைப்பின் மூலமும் ஆனந்தம்தான். இது ஒன்றுதான் வழி!

சத்குரு ஜக்கி வாசுதேவ்

# சித்திரை புத்தாண்டு சிறப்பு மலர்-14.04.2011

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் புதுவருட வாழ்த்துக்கள்!



## ஆர். வி.ஜி

மருந்தகம்

504, ஆஸ்பத்திரி வீதி, (O.P.D முன்பாக) யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 021 222 2129

ஆங்கில மருந்து வகைகள், ஊட்டச்சத்துக்கள்
மற்றும் பால்மா வகைகள் அனைத்தையும்
நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

## R.V.G

ஸ்தாபனம்

58, நல்லூர் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
தொ. பே. இல : 021 222 6808

---

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் புதுவருட வாழ்த்துக்கள்



## கிருஷ்ணா நகை மாளிகை

குறித்த நேரத்தில் குறித்த தவணையில் தரம் குன்றாத 22 கரட் தங்க நகைகளைப் பெற்றுக் கொள்ள நாடுங்கள்

இல- 09, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 5046

கிளை : கிருஷ்ணா அடகுக்கடை
இல- 370, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.



---

அனைவருக்கும் சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

சுகாதார முறையில் உணவிற்கும் வைத்தியத்திற்கும் விஷேடமாக தயாரிக்கப்பட்டது.

VSP 1969

## V.S.P லத் ஓயில்

தயாரிப்பாளரும்
ஏக விநியோகஸ்தரும்

பரிமளா ஸ்ரோர்ஸ்

இல:26 A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 0212224135, 0212229165

---


அனைவருக்கும் புதுவருட வாழ்த்துக்கள்

# HOLCIM CEMENT

Jaffna District Batas
யாழ். ஏக விநியோகஸ்தர்கள்

SRI RANGAN ENTERPRISES
370, Hospital Road, Jaffna.

ஸ்ரீ றங்கன் என்ரப்பிறைஸ்
370, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P - 021 222 2027




DELMEGE- மில்க்குறோ, பேக்கிங்பவுடர், ஜாம், ஐசிங்சுகர், ரின் மீன், TVP சோயாமீற், ஜலற்றீன், புடிங், நூடில்ஸ், கஸ்ரட் பவுடர், கரமல், வட்டிலப்பம், கொக்கோப்பவுடர் அனைத்தையும் சில்லறையாகவும் மொத்தமாகவும் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய ஸ்தாபனம்.

Selva Hardware
120, Stanley Road, Jaffna.
செல்வா காட்வெயர்
120, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
T.P - 021 222 2873

**Lanka milk Food**
- Dairy farm
- My juice
- Farleys Rusk 150g
- Casilian 250g

- Corn Flaskes
- Farleys Rusk 60g
- Casilian 120g
- Happy Cow Cheese

# சித்திரை புத்தாண்டு சிறப்பு மலர்-14.04.2011

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்!



அழகு வாய்ந்த
மலர்கள் தானே நீங்கள்! உங்கள் அழகு மலரட்டும்...

New Selection

## சரவணா புடைவையகம்



## NALLUR SARAVANA TEX

526, 529, Pointpedro Road,
Nallur, Jaffna.
T.P.: 021 222 1723 Fax: 021 222 1723

770,772, K.K.S Road,
Thaddatheru Junction, Jaffna.
T.P.: 021 222 0421 Fax: 021 222 0421

Email: nallur.saravana@gmail.com

526, பருத்தித்துறை வீதி,
நல்லூர் வீதி(பின் வீதி), சிவன் கோயில் அருகில், யாழ்ப்பாணம்.


770,772, கே.கே.எஸ் வீதி, தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே:-0212220421

---

MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

எமி இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

## ராம்கோ சீமெந்து



## RAMCO CEMENT

ராம்கோ சீமெந்தை பயன்படுத்துங்கள்!
உங்கள் பணத்தை மீதப்படுத்துங்கள்!

ஆசியாவின் முதலாம் தர(நம்பர்-1) தொழிற்சாலையாக தெரிவு செய்யப்பட்ட RAMCO சீமெந்து (கோபுரமார்க்) என்பதை மக்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

- இலங்கையின் SLS 107 தரச்சான்றிதழ் பெற்றுக்கொண்ட சீமெந்து
- 50 ஆண்டுகள் நிறைவைக் கொண்டாடும் சீமெந்து
- மிகமிக உயர்தரம் கொண்ட சீமெந்து
- ISO 9001 உலகத்தர சான்றிதழ் பெற்றுக்கொண்ட சீமெந்து

ராம்கோ சீமெந்தின் ஏக இறக்குமதியாளர்கள்

## ஐஸ்வர பகவான் அன் கம்பனி

தொ. பே: 021 222 2122,
021 222 2350

91, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

---

மலரும் புத்தாண்டு மகிழ்ச்சியாக அமைய வாழ்த்துக்கள்

உடல் வளர்ச்சிக்கு


## ஜீவாகாரம்

உள்ளூர் உற்பத்தியான ஜீவாகாரம் சிறியோர் முதல் பெரியோர் வரை பாவிக்க உகந்தசத்துணவு. இரசாயனக் கலவை அற்றது




உள்ளூர் உற்பத்திகளுக்கு ஆதரவு வழங்குவோம் என்றும் மக்கள் விரும்பிப் பாவிப்பது

### அண்ணா தயாரிப்புக்களே!



| | |
|---|---|
| அண்ணா கோப்பி | அண்ணா மிளகாய்த் தூள் வகைகள் |
| அண்ணா அரிசி மா | அண்ணா பத்தி வகைகள் |
| குரக்கன் மா | அண்ணா பற்பொடி |
| ஆட்டா மா | அண்ணா இனிப்பு வகைகள் |

## அண்ணா தொழிலகம்
இணுவில்

தொலைபேசி இல: 021 222 3565

# சித்திரை புத்தாண்டு சிறப்பு மலர்-14.04.2011

## புத்தாண்டு அருளாசிச் செய்தி



இன்று புத்தாண்டு பிறந்திருக்கின்றது. இப் புதுவருடம் எல்லோருக்கும் மகிழ்ச்சியையும் மங்களகரமான சுபீட்ச வாழ்க்கையையும் தரவேண்டுமென்று வாழ்த்துகின்றோம்.

இன்று பிறந்துள்ள தமிழ் வருடமான கர வருடம் ஈழம் வாழ் அனைத்து மக்களுக்கும் இன்பம் நிறைந்த வாழ்க்கையையும் மனமகிழ்வையும் அள்ளித்தர வேண்டும் என்று நல்லைக் குருமணியின் பாத பங்கஜம் பணிந்து எல்லாம்வல்ல நல்லைக்கந்தனையும் பிரார்த்தித்து உளமார்ந்த மகிழ்ச்சியுடனே ஆசி நல்கி இறும்பூதெய்து கிறோம்.

இதுவரை காலமும் பட்ட துன்ப துயரங்கள் யாவும் நீங்கப்பெற்று இப்புது வருடப்பிறப்பு முதலாக ஈழம் வாழ் மக்கள் அனைவரும் நல்ல சந்தோஷம் நிறைந்த சமாதான நல்வாழ்வு வாழ வேண்டுமென்று உளமார பிரார்த்தித்து அருளாசி நல்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஆதீன குருமுதல்வர், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்,
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம், யாழ்ப்பாணம்.

## கர வருஷம் வசந்த வருஷமாக மலரட்டும்!




கர வருடம் சித்திரை மாதம் முதலாம் திகதி (14.04.2011) வியாழக்கிழமை பிறக்கின்றது. புதுவருடம் பிறப்பது அனைத்து மக்களும் சகல சம்பத்துகளும் பெற்று வசந்தமான வாழ்வு பெற எல்லாம் வல்ல அன்னை ஸ்ரீ முத்துமாரி அம்பாளை இறைஞ்சி வேண்டிப் பிரார்த்தித்து அடியேனுடைய உள்ளார்ந்த தமிழ்ப் புத்தாண்டு நல்வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவிக்கின்றேன்.

**"பிரதிஷ்டா சிரோமணி"**

**சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிகதேசிகர், J.P,**
**சிவாச்சார்ய பீடாதிபதி,**
**பிரதம குரு: வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்.**

## செஞ்சொற் செல்வரின் புத்தாண்டுச் செய்தி



பிறக்கின்ற புத்தாண்டில் எல்லோரும் சகல சௌபாக்கியங்களும் பெற்று வாழ வாழ்த்துகின்றேன்.

இவ்வாறு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் விடுத்த புத்தாண்டுச் செய்தியில் தெரிவித்துள்ளார். அவர் விடுத்த புத்தாண்டுச் செய்தியில் மேலும் தெரிவித் திருப்பதாவது;

இறையருள் நிலவட்டும். இனிய புத்தாண்டை அனைவரும் வரவேற்போம். இயற்கை அன்னையை அனைவரும் வழிபாடு செய்வோம். நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் என்னும் பஞ்சபூதங்கள் உலகிற்குச் சாதகமாக அமைய வேண்டுதல் செய்வோம். மனிதர்களால் வரும் அச்சங்களுக்கு அப்பால் இயற்கை பற்றிய ஏக்கம் எல்லா நாட்டிலும் இன்று ஏற்பட்டுள்ளது.

இப்புதிய ஆண்டு பிறக்கும் வேளை இவ்வுலகிலுள்ள அனைத்து ஜீவராசிகளையும் இயற்கை தெய்வங்களே காத்தருள்க என மன்றாடுவோம். மனித சமூகம் மகத்துவமான வாழ்நாளை வீண்விரயமாக்காது நல்லவண்ணம் வாழ எண்ணுவோம். கடந்து செல்லும் ஆண்டில் நாம் பெற்ற நன்மைகளை நினைந்து இறைவனுக்கு நன்றி சொல்வோம். நாம் விட்ட தவறுகளை நினைத்து அத்தவறுகளில் இருந்து நல்வழி காண வேண்டுதல் செய்வோம். பகையை வளர்க்காது பயனுள்ளவர்களாக நாமும் பிறரும் வாழ வழி செய்வோம். இனிய நட்புகளை வளர்த்துக் கொள்வோம். காலத்தின் பெறுமதியை உணர்ந்து அவப் பொழுதைத் தவிர்த்து ஒவ்வொரு விநாடியையும் தவப்பொழுதாகக் கருதி கடமை செய்வோம்.

எங்களைவிட வசதி குறைந்தவர்களை எண்ணுவோம். அவர்களுக்கு எம்மால் எவ்வாறு உதவலாம் எனச் சிந்திப்போம். நன்றே சிந்தித்ததை அன்றே செய்ய முற்படுவோம். எங்களுக்கு இறைவன் தந்த நல்ல சந்தர்ப்பங்களுக்கு நாம் என்ன நன்மைகள் செய்தோம் என்று எங்களை நாம் வினாவி நல்வழி காண்போம்.

சித்திரைப் புத்தாண்டு நாள் சிந்திப்பதற்குரிய நன்னாள். எம்மை வளர்த்து ஆளாக்கிய தாய், தந்தை, ஆசிரியருக்கு எம் உழைப்பால் பெற்ற உபகாரங்களை வழங்கி உவகை கொள்ளும் திருநாள். பாடுபட்டு உழைக்கும் உழைப்பாளிகள் குடும்பமாகக் கூடி உண்டு மகிழந்து உறவாடும் திருநாள். இப்புனித நாளில் அனைவரும் வழிபாடு செய்து நல்வாழ்வு பெற வாழ்த்துகின்றேன். எங்கள் திருநாடு, எமக்குரிய காவல் அனைத்தையும் இறைவன் காத்தருள வேண்டி, அன்பும் பண்பும் அறமும் ஒற்றுமையும் நிலைத்திட வேண்டி அமைகிறேன்.

**ஆறு. திருமுருகன், தலைவர்,**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பளை.**

## சாந்தி, சமாதானம் நிலவட்டும்... இந்துசமயப் பேரவை வாழ்த்து

கடந்த காலத்தில் ஏற்பட்ட இன்பதுன்பங்களை எண்ணி மறந்து புதிய கர வருடத்தை ஆத்மீக வழிபாடுகளோடு மங்களகரமாக வரவேற்பதோடு அனைவருக்கும் புதுவருட வாழ்த்துக்களை இந்து சமயப்பேரவை சார்பில் தெரிவித்துக் கொள்கின்றோம்!

இவ்வாறு இந்து சமயப் பேரவையின் பொதுச்செயலாளர் சி.சக்திகிரீவன் விடுத்த புத்தாண்டுச்செய்தியில்தெரிவித்துள்ளார். அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இந்நாளில் உலகில் வாழும் அனைத்து மக்களும் சகல வளங்களும் பெற்று, மகிழ்வோடு வாழ இறைவனைப்பிரார்த்திப்போமாக! கோடிக்கணக்கான இந்துக்களும், பௌத்தர்களும், மகிழ்ச்சிகரமாகக் கொண்டாடும் இப்புத்தாண்டில் எம்மாலியன்ற தர்மங்களை இயற்றுவோமாக!

நடைபெற்ற யுத்தத்தில் தாய், தந்தையரை இழந்தும், உற்றார், உறவினரை இழந்தும் சோகத்தில் வாழ்வோருக்கும் எம்மாலியன்றவற்றைச் செய்வோமாக!

உலகில் நிலவும் அதிகாரப்போட்டிகள் முடிவுக்கு வருவதோடு இந்நாட்டில் நீண்ட நெடு நாட்களாக நிலவி வரும் இப்பிரச்சினைக்கான தீர்வு கிடைக்க வேண்டும் என்றும் எங்கும் சாந்தி, சமாதானம், அமைதி நிலவ எல்லாம் வல்ல ஆடல்வல்லானைப் பிரார்த்திப் போமாக!

## இனிய புத்தாண்டாக மலரட்டும்! இந்துமாமன்ற புத்தாண்டுச் செய்தி

பிறக்கும் புத்தாண்டில் தமிழ்மக்களின் இன்னல்கள் நீங்க இறைவனைப் பிரார்த்திப்பதாக அகில இலங்கை இந்துமான்றம் விடுத்த புத்தாண்டுச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாமன்றத்தின் தலைவர் வி.கைலாயப்பிள்ளை, பொதுச் செயலாளர் கந்தையா நீலகண்டன் ஆகியோர் சார்பாக விடுத்த புத்தாண்டுச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்படிருப்பதாவது,

தமிழ் மக்கள் தமது புதிய ஆண்டை பல்வேறு எதிர்பார்ப்புகளோடும், நம்பிக்கையோடும் வரவேற்கிறார்கள். கடந்த மூன்று தசாப்த காலமாக எமது சகோதர, சகோதரிகள் வேதனைகளையும், சோதனைகளையும், இழப்புக்களையும் ஒருங்கே சுமந்து, களைத்து, கையறு நிலையில் நின்ற வடு இன்னமும் ஆறவில்லை. தற்போது சற்று நிம்மதிப் பெருமூச்சு விடும் இவ்வேளை மீண்டும் சகஜ நிலைதோன்ற வேண்டும் என்ற அவாவே அனைவர்மனதையும் மேவி நிற்கிறது. ***சாண் ஏற முழம் சறுக்கும்*** வாழ்வியலில் இருந்தவர்கள் இனியாவது சுதந்திரத்துடனும், சுயமரியாதையுடனும் வாழும் சூழலையையே எதிர்பார்க்கின்றார்கள். அதுவே தமிழ் மக்களின் கனவும் கூட. ***கனவு மெய்பட்ட வேண்டும்*** என பாரதி கூறியதை மெய்யாக நினைக்கிறார்கள்.

கடந்த காலங்களில் எமது சகோதர, சகோதரிகள் சந்தித்த வேதனைகள், சோதனைகள், இடம்பெயர்வுகள் கண்டு அகில இலங்கை இந்து மாமன்றம் பல்வேறு நிவாரணப் பணிகளை தன்னலான வரை செய்தது. அண்மையில் வெள்ளத்தால் இடம்பெயர்ந்து அல்லலுற்ற எமது சொந்தங்களுக்கு அடிப்படைத் தேவைகளை வழங்கி உதவியது. இவ் வேதனையைக் காணும் போதெல்லாம் ***சோதனைகள் போதும் இறைவா! அனைவரையும் நிம்மதியாகவும், மகிழ்ச்சியாகவும் வாழ வழிசெய்ய வேண்டும்*** என்றே பிரார்த்திக்கின்றோம்.

பிறக்கும் புதிய ஆண்டில் தமிழ் மக்கள் கடந்த பல வருடங்களாக அனுபவித்து வந்த இன்னல்கள் தீரவேண்டும். அவர்களது அபிலாசைகள் நிறைவேறும்வண்ணம் ஓர் அரசியல் தீர்வு கிடைக்க வேண்டும். அதுவே எமது பிரார்த்தனையாகும்.

இந்தப் புத்தாண்டுதினத்தில் உலகெலாம் பரந்து வாழும் எங்களின் உடன் பிறப்புகளுக்கும், இந்து அமைப்புகளுக்கும் உருக்கமான வேண்டுகோள் ஒன்றினை வெளியிடவிரும்புகின்றோம். இந்த நாட்டில் வாழும் சகோதர, சகோதரிகளுக்கு குறிப்பாக பல்கலைக்கழகங்களிலும் ஏனைய நிறுவனங்களிலும் கல்விகற்கும் எமது உறவுகளின் கல்விமேம்பாட்டிற்கும் அவர்கள் மேலும் உதவ முன்வரவேண்டும். அதே சமயம் எங்கள் இளம்சமுதாயத்தினை ஆன்மீக வழியில் வளர வழிகாட்டுவது முக்கியமாகும்.

பிறக்கும் புத்தாண்டில் மாமன்ற யாழ். பிராந்தியக் கட்டடத்தில் சைவவித்தகர் பயிற்சிநெறியினை மாமன்றம் ஆரம்பிக்க இருக்கிறது. இதற்கான விண்ணப்பங்கள் ஏற்கனவே பத்திரிகைகள் மூலமாக கோரப்பட்டுள்ளன. அதே சமயம் ***மக்கள் சேவையே மகேஸ்வரன் பூசை*** என்பதனை என்றும் மறவாத எமது மாமன்றம் சிவதொண்டரணிகள் மூலம் மக்கள் பணியை மேலும் எடுத்துச் செல்லும் நன்நோக்குடன் யாழ். மண்ணில் சிவதொண்டர் மாநாட்டை மே மாதம் 27ஆம், 28ஆம் திகதிகளில் நடாத்த இருக்கிறது. எமது பணியில் இணைந்து உதவுமாறு அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.


## புத்தாண்டே! உன்வரவு நல்வரவு ஆகுக!

"கர" என்னும் திருநாமம் கொண்டின்று மலர்கின்ற
புத்தாண்டே! உன்வரவு நல்வரவாய் விளங்குகவே!
கரவாது அனைவரதும் நலமெல்லாம் பெருகிடவே
காத்திரமாய் உன் பணியை ஆற்றிடுவாய் எங்ஙுனுமே!
தரமான வாழ்வுதனைத் தரணியிலே யாவருமே
பெற்று மன நிறைவுடனே வாழவகை செய்திடுவாய்!
அரனவனின் அடிதொழுது அகிலத்தில் புரிந்துணர்வு
அன்புமிக ஓங்கிடவே பிரார்த்தனை செய்திடுவோம்!

**நாயன்மார்க்கட்டு**
**ப.மகேந்திரதாசன்**

# சித்திரை புத்தாண்டு சிறப்பு மலர்-14.04.2011

# பிறக்கும் புத்தாண்டில் எல்லோருக்கும் பெருமை சேர்ப்போம்



வருடந்தோறும் வரும் சித்திரை மாதத்து முதலாம் நாளை இந்துக்கள் வருடப்பிறப்பாகக் கொண்டு பெருமையுடன் கொண்டாடுகிறார்கள். இவ்வுலக இயற்கைத் தெய்வமாக மக்களை வாழ்விக்கும் சூரியபகவான் இராசி மண்டலத்தின் முதலாம் இராசியான மேட இராசியிற் பிரவேசிக்கும் காலம் சித்திரை மாதம் ஆகும். இந்த நன்நாளைப் புதுவருடப் பிறப்பெனவும் புத்தாண்டு எனவும் சிறப்பாகக் கொண்டாடுவார்கள்.

எமது இலங்கைத் திருநாட்டில் தமிழ்-சிங்களப் புத்தாண்டாக இரு இன மக்களும் கொண்டாடுவதும் இந்தக் கொண்டாட்டத்தில் சிங்கள மக்களும் தமிழ் மக்களைப் போலவே புத்தாடை அணிந்தும் பெற்றோரையும் பெரியோரையும் வணங்கி ஆசீர்வாதம் பெற்றும் நல்ல நாள் பார்த்துக் கைவிசேடம் கொடுக்கல்-வாங்கல் செய்தும் இறைவழிபாடுகள் நடாத்தியும் ஆண்டுதோறும் இத்தினத்தைச் சிறப்பிக்கின்றார்கள். இந்தக் கொண்டாட்டமே எம்நாட்டில் தமிழ்-சிங்கள மக்களின் சகோதரத்துவத்தினை உலகோர் உணர வைக்கின்றது.

தமிழ்நாட்டில் தைத்திருநாளைப் புத்தாண்டாகப் பிரகடனப்படுத்திய போதும் அது எமது நாட்டைப் பொறுத்தவரை ஏற்புடைத்தாகக் காணப்படவில்லை. அதற்கு தமிழ்நாட்டின் ஆட்சிபீடத்தின் எம் மக்கள் மேல் கரிசனை இல்லாத செயற்பாடும் காரணமாயுள்ளது. தமிழகத்தின் பெரும் செயற்பாடுகள் இலங்கையை முன்பு மாற்றங்களுக்கு உள்ளாக்கியுள்ளது போல இப்பொழுது ஏற்படுவதில்லை.

புத்தாண்டுக் கொண்டாட்டத்தைப் பொறுத்தமட்டில் எம் நாட்டின் இன ஒற்றுமைக்குப் பலமாய் உள்ள தமிழ், சிங்களப் புத்தாண்டு நாட்டில் நல்லுறவைப் போற்றி வளர்க்க வாய்ப்பாகின்றது. இதனை நாட்டு மக்கள் பரந்த நற்சிந்தனையுடன் ஏற்றுக் கொண்டாடின் அது எல்லோருக்கும் நலம் தரும் எனலாம். இந்து மதத்தில் சில சிறப்புக் கருத்துக்களைக் கொண்டதே பௌத்த மதம். எனவேதான் இந்து மத வழிபாட்டுடன் பௌத்த மதமும் பல்வேறு இடங்களிலும் இணைந்திருப்பதை அவதானிக்க முடிகின்றது. இந்த விதத்திலேதான் இலங்கையில் சித்திரைப் புத்தாண்டுச் சிறப்புகளும் இடம்பெறுவதை நாம் காணலாம். வருடங்கள் அறுபதாக வகுக்கப்பட்டுள்ளன.

பிரபவ முதல் அட்சய வரை அறுபது பெயர்களுடன் அவை அமைந்திருக்கின்றன. முதல் வருடமான பிரபவ உயர்வான உதயம் எனவும் அட்சய என்பது குறைவில்லா நிறைவு எனவும் ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு சிறப்புகளைக் கொண்டதாக இருக்கின்றது. வருடங்கள் அறுபது தோன்றிய வரலாற்றுக் கதையாகத் திருமாலின் பேரழகில் நாரதர் மனம் மயங்கித் தான் ஒரு மங்கையாகத் திருமாலிடம் கொண்ட அன்பினால் வருடம் ஒரு பிள்ளையாக அறுபது பிள்ளைகளைத் தோற்றுவித்து அவற்றிற்கு ஒவ்வொரு பெயரிட்டு உலக மக்கள் இதனை உணர்ந்து கொண்டாட வழிவகுத்த தாகக் கூறப்படுகின்றது.

இந்த விதத்திலே பிறக்கும் புத்தாண்டு "கர வருடம்" என்னும் பெயரைக் கொண்டதாகச் செயல் திறமுறும் எனும் அர்த்தம் கொண்டு விளங்குகின்றது. எனவே இதனை நாமும் நமது எண்ணங்களிலும் செயல்களிலும் நன்குணர்ந்து பிறக்கும் புத் தாண்டுச் செயல்கள் யாவும் நல்லனவாகவும் எல்லோர்க்கும் நன்மை பயப்பனவாகவும் அமைந்து செயல்கள் திறமுற இறைவழிபாடுகளையும் பெற்றோர், பெரியோர், நல்லோர் ஆசிகளையும் பெற்று நல்வாழ்வு காண்போமாக.

சிவஸ்ரீ தியாகராஜக் குருக்கள்
(நீர்வைமணி)


அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

# TILKO JAFFNA CITY HOTEL




- Luxurious star class spacious 42 rooms Hotel
- In the Heart of Jaffna Town
- Beautiful landscaped garden
- Rooms with sea views and city views
- Luxurious rooms with LCD TV, Mini bar, Tea making facilities, Free wifi, modern bathrooms and many more
- Penthouse suites
- Gymnasium and Spa
- Bar & Restaurant Serving North / South Indian continental and Chinese Cuisines
- 02 conference rooms/ Large Banquet Hall (Can accommodate 450 pax or 900 theater style)
- Business center

70/6, K.K.S. Road, Jaffna. Tel: 021 222 5969

www.cityhoteljaffna.com
info@cityhoteljaffna.com

# சித்திரை புத்தாண்டு சிறப்பு மலர்-14.04.2011

அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

பார்வையில் பழுதுண்டா? பயம் எதற்கு? நீங்கள் பொங்கிடும் பார்வையைப் பெற்றிட, பற்களில் பழுதுண்டா? விழுந்துவிட்டனவா? முன்னரைவிட உறுதியான, அழகான வெண்சங்குப் பற்களைக் கட்டிட – இளைய தலைமுறைகளே! மிதப்புப் பற்களா? அழகிய அமைப்பைப் பெற்று உறுதிமிக்க பற்கிளிப்புகளைப் பொருத்திட

யாழ்ப்பாணத்தில் கை தேர்ந்த ஒரே ஸ்தாபனம்

கட்டுப்பற்களைச் சுத்தம் செய்வதற்கான மாத்திரை விற்பனையில் உண்டு.



## எரிக்கணேஷ்

மூக்குக் கண்ணாடியகமும் பல் கட்டுமிடமும்

இல 564,566 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே:021 222 2486

கிளைகள்:
பழைய பொலிஸ் நிலையம் முன்பாக, இல 80, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.
இல.91, கே.கே.எஸ் வீதி, கொக்குவில் சந்தி, கொக்குவில்.

---

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் புதுவருட வாழ்த்துக்கள்!

## ஞானம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்

மீண்டும் பாதுகாப்பான பயணத்துக்கு
யாழ்–கொழும்பு–யாழ், யாழ்–வவுனியா–யாழ்.

சொகுசு வான்

**யோகாஸ் கொமினிக்கேசன்**
பிரதான வீதி, வட்டுக்கோட்டை.
தொ.பே: 021 321 5270



திருமணப் பட்டுப் புடைவைகளுக்கும் நவீன ரக ஆடைத் தெரிவுகளுக்கும் சிறுவர், சிறுமியர்களுக்கான சிறந்த றெடிமேற் ஆடைகளுக்கும்



**ஞானம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்**
18A, நவீன சந்தை, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 5679

---

ஓம் லக்ஷ்மி நாராயணா துணை




அனைவருக்கும் எமது புதுவருட நல்வாழ்த்துக்கள்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பல்பொருட்களை பெற்றுக் கொள்ளலாம்.

## நியூ ஸ்ரீ திருப்பதி ரேடர்ஸ்

## New Sri Thiruppathy Traders



No.151,
K.K.S Road,
Jaffna. T.P:- 021 222 1524

---


அனைவருக்கும் இனி புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

## Peninsula Super Mall

Super Market Services

சகல பொருட்களையும் ஒரு கூரையின் கீழ் ஒரே நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்

PSM



பொதி செய்யப்பட்ட பலசரக்கு பொருட்கள்
பாடசாலை உபகரணங்கள்
பால்மா வகைகள்
ஐஸ் கிறீம் வகைகள்
குளிர்பானங்கள்
பழ வகைகள்
பழ ரசங்கள்
இறைச்சி வகைகள்
அன்பளிப்பு பொருட்கள்
கிறிஸ்மஸ், புதுவருட வாழ்த்துமடல்கள்
கேக் தயாரிக்கும் பொருட்கள்

வகை வகையான தரமான அனைத்து பொருள்களை பெற்றிட இன்றே நாடுங்கள்...

Parking Facility Available

PSM
No: 127, Kandy Road,
Kachcheri,
Jaffna.
021 222 1848
psmjaffna@gmail.com

---

மலரும் புத்தாண்டு மகிழ்ச்சியாக அமைய வாழ்த்துக்கள்

நவீன அழகிய தங்க ஆபரணங்களைத் தெரிவு செய்ய சிறந்த இடம்

## சோனியா ஜுவல்லரி

## SONIYA JEWELLERY



360/5,
Main Street,
Jaffna.
T.P.: 021 3008493,
360/5,
பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

# சித்திரை புத்தாண்டு சிறப்பு மலர்-14.04.2011


இனிய புதுவருட வாழ்த்துக்கள்

நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்குச் சிறந்த ஸ்தாபனம்

## அசோகா நகை அகம்

இல:111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே: 021 222 6290

நம்பிக்கை நாணயம்–உத்தரவாதம்

22 கரட் தங்க நகைகளுக்கு

**ASOKA JEWELERS**



எல்லோரும் இன்பம் பெற இனிதே வாழ்த்துகிறோம்

அழகுக்கு அழகு செய்யும் நவீன அழகிய டிசைன்களில் தங்க, வைர நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்

## ஆசைப்பிள்ளை அன் சன் நகைமாடம்

தரம் நாடுவோர் தவறாமல் நாடுமிடம்

இல:10, பஸ் நிலையம், சங்கானை



பிறக்கட்டும் சித்திரை புத்தாண்டு ! மலரட்டும் புதுவாழ்வு!!


## லாவண்யா பல் மூக்கு கண்ணாடி அகம்

வடமராட்சி வாடிக்கையாளர்களின் நலன் கருதி எமது நெல்லியடிக் கிளை தினமும் திறந்திருக்கும். மேலும் மூக்குக் கண்ணாடிகள்,செயற்கைப்பற்கள், மிதப்புப்பற்களுக்கான நிரந்தர கிளிப் என்பவற்றின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

552, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (போதனா வைத்தியசாலை முன்பாக)

தொ. பே. இல :021 222 9053

கிளை- பருத்தித்துறை வீதி, நெல்லியடி. (பொலிஸ் நிலையம் முன்பாக)



எல்லோருக்கும் எமது இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்!

## J.T ரான்ஸ்போட்

யாழ் → கொழும்பு

கொழும்பு → யாழ்

சகல விதமான பொருட்களும் நியாயமான கட்டணத்தில் கொண்டு வந்து தரப்படும்




J.T ரான்ஸ்போட்

இல.302,ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம்.

41 வருடகால மதிப்போடு விளங்கும்

## யாழ். வணிக நிலையம்

## Jaffna Traders

இல.336, 338, (மேல்மாடி) ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம்.

குழந்தைகளின் பால்மா, பிஸ்கற் வகைகள், பெண்களுக்கான கிறீம் வகைகள், குளிரூட்டப்பட்ட அங்கர்பட்டர், மாஜரின் வகைகள், குரக்கன், எள்ளு, தேயிலை மற்றும் சகல வகைப் பொருட்களையும் ஒரே இடத்தில் நியாய விலையில் பெற்றுக் கொள்ள நாடுங்கள்.

# சித்திரை புத்தாண்டு சிறப்பு மலர்-14.04.2011

## வடக்கு மாகாண ஆளுநரின் புத்தாண்டுச் செய்தி



பாரம்பரியமாக தமிழ்–சிங்கள புத்தாண்டு இலங்கையில் இருஇன மக்களாலும் கொண்டாடப்பட்டு வருகின்றது. இப்புத்தாண்டு பிரதான இரு இனங்களினதும் முக்கியமான தினமாகும். இக்காலப்பகுதிக்குள் தங்கள் பழைய துன்பங்களை எல்லாம் மறந்து உத்வேகத்துடன் புதிய நம்பிக்கையுடனும் புதிய எதிர்காலத்தை எதிர்கொள்கின்றனர். இந்நாட்கள் எமது கலாசாரத்தை எமக்களித்த முன்னோர்களை நினைவுகூர வைக்கின்றன. எமது மரபுவழி உரிமையை ஆதரிக்க வேண்டிய தேவை எமக்குண்டு.

இவ்வாறு வடக்குமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி விடுத்துள்ள புத்தாண்டுச்செய்தியில் தெரிவித்துள்ளார்.


அவரின் புத்தாண்டுச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ அவர்களின் தூரநோக்கின் அடிப்படையிலும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும் வடமாகாண மீள் குடியமர்வு, அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பிற்கான ஜனாதிபதி செயலணியின் தலைவருமாகிய பசில் ராஜபக்ஷ அவர்களின் வழிகாட்டுதலுக்கு அமைவாகவும் பாதுகாப்பு படையினரின் உதவியுடனும் வட பகுதி மக்கள் அபிவிருத்தியின் பலாபலன்களை அனுபவிக்கின்றனர்.

எமது பாரம்பரியத்தின் வழிகாட்டலில் மீள் ஒருங்கிணைப்பிற்கான செயற்பாட்டைப் பலப்படுத்தும் நோக்கில் எமது மனம், எமது குடும்பம், எமது சமூகம் ஆகியவற்றை ஒருங்கிணைத்துத் தனித்துவமான இலங்கையின் வளமான சமூகத்தைக் கட்டியெழுப்ப நாம் ஒன்றிணைய வேண்டும். நாம் எல்லோரும் எமது பாரம்பரியத்துடனும் புத்தாண்டுக் களியாட்டங்களுடனும் மகிழ்ச்சி பெறுவோமாக.

ஒவ்வொருவருக்கும் வளமான எதிர்காலம் உருவாக எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்!

## சித்திரை புத்தாண்டு வாழ்த்து



ஆண்டுதோறும் சித்திரைத் திங்கள் தமிழர் கொண்டாடி மகிழும் சித்திரைப் புத்தாண்டு வருகிறது.

தைப்பொங்கல் எவ்வாறு தமிழர் பண்பாட்டு விழாவாகக் கொண்டாடப்படுகின்றதோ அதேபோலவே சித்திரைப் புத்தாண்டும் தமிழர் பண்பாட்டு விழாவாகக் கொண்டாடி மகிழ்வது பாரம்பரியமும், வரலாறுமாகும்.

இவ்வாறு தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை. சோ.சேனாதிராஜா விடுத்துள்ள புத்தாண்டுச் செய்தியில் தெரிவித்துள்ளார். அவரின் புத்தாண்டுச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

இலங்கைத் தமிழர் வரலாறு வேதனைகளும், சோதனைகளும், பேரிழப்புகளும், பேரழிவுகளும், இதயத்தில் மாறாத காயங்களாய் கண்ணீர் பொங்கி நிற்கும் விழிகளாய் தொடர் கதையாய் நிற்கின்றது. இருந்த பொழுதிலும் தமிழர் பண்பாடு பேணி அடையாளம் காத்து நாகரிமுள்ள மனித குலத்து மக்களாய் எழுந்து நிற்போம். விடிவும் விடுதலையும் பெற்று நிற்போம் என்ற உறுதியுடன் சித்திரைப் புத்தாண்டைக் கொண்டாடுவோம்.

எம் இதயம் நிறைந்த வாழ்த்துக்களைத் தமிழர் இதயத்தில் சமர்ப்பித்து நிற்கின்றேன்.

மாவை. சோ. சேனாதிராசா (பா.உ)
பொதுச் செயலாளர்,
இலங்கைத் தமிழரசுக் கட்சி,
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.




# சித்திரை புத்தாண்டு சிறப்பு மலர்-14.04.2011

அனைவருக்கும் இனிய எமது புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

## வேல் முருகன் வாணிப நிலையம்

**VELMURUGAN TRADERS**

தற்கால நவநாகரிக கட்டடங்களுக்கு ஏற்ப சகல விதமான வர்ண பெயின்ட் வகைகளும், சுண்ணாம்பு மற்றும் கட்டடப் பொருள் விற்பனையாளர்.

இல.56A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 9437

---

பிறக்கட்டும் சித்திரைப் புத்தாண்டு ! மலரட்டும் புதுவாழ்வு!!

## Yogi's Beauty

**(The Academy of Beauty Culture, Hair Dressing & Home Science)**



அழகுக்கலை (Advanced Beauty Culture & Hair Dressing Diploma Course)
Advanced Cosmetology (Diploma Course)
நவீன ஒப்பனையும் தலை அலங்காரங்களும் (Advanced Bridal Make Up- Hair Styles
10 வகையான சாறிகட்டும் முறைகள்.
கேக் ஐசிங், மாச்சீனி மலர்கள் (Birthday Cakes, Fondant Structure & Sugar FlowerS)

**பயிற்சி வகுப்புகள் நடைபெறுகின்றன.**

**எமது நிறுவனத்தில் அளிக்கப்படும் Advanced Facial சிகிச்சைகள்.**

உங்கள் முகத்தில் அம்மைத் தழும்புகள், பள்ளங்கள், கரும்புள்ளிகள் இவைகளுக்கு எமது நவீன DERMABRASION TREATMENT மூலம் புதுமையான முறையில் சிகிச்சைகள்.

**இப்படி பல நவீன சேவைகளுடன் மணப்பெண் அலங்காரம் எமது சிறப்பம்சமாகும்.**

**Mrs. Yogini Shanmuganathan**

- Diploma in Aesthetics & Advanced Cosmetology (India)
- Diploma in Advanced Bridal Makeup & Character Makeup (India)
- Diploma in Home Economics (India & Srilanka)

75, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். T.P:0212222796, 0213210077, 0777164923, 0718788814 yogis beauty@gmail.com

---

*அனைவருக்கும் இனிய சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்*


## L நியூ நெல்சன் லேனர்ஸ்

அரச அங்கீகாரம் பெற்ற முதன்மைச் சாரதிப் பயிற்சிப் பாடசாலை


**பதிவு இல. D.S.590**



- ✽ சகல வாகனங்களுக்கும் சிறந்த முறையில் பயிற்றுவித்து விரைவாகச் சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொடுக்கப்படும்.
- ✽ எழுத்துப் பரீட்சையில் சித்தியடைய விசேட வகுப்புக்கள்.
- ✽ அதி கூடிய பயிற்சி நேரங்கள். ✽ அதி கூடிய பயிற்சிக் காலங்கள்.
- ✽ சாரதிப் பயிற்சிகள் எமது அலுவலகத்தில் இருந்து ஆரம்பிக்கப்படும்.
- ✽ தவணை முறைக் கட்டணங்கள்.
- ✽ வீதி ஒழுங்கு நூல் இலவசமாக வழங்கப்படும்.



**உரிமையாளர்:- T.டயஸ்**





இல.89, கண்டி வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 0212224527,
0773581916

கிளை: இல. 127,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே :- 021 3207598

கிளை: இராமலிங்கம் வீதி,
சாவகச்சேரி.
(பிரதேச செயலகம் அருகில்)
தொ.பே: 0777942312

# மக்கள் வங்கியின் வனிதா வாசனா மற்றும் ஆஷ்சர்ய வைப்புகளுக்கான சீட்டிழுப்புகள்

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியின் வனிதா வாசனா மற்றும் ஆஷ்சர்ய வைப்புக்களுக்கான 2010 ஆம் ஆண்டிற்குரிய சீட்டிழுப்புக்கள் மக்கள் வங்கிக் கிளைகளில் புதுவருட தினமான இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளதாக மக்கள் வங்கியின் உதவி பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார்.

இவ்வைபவத்தில் பிரதம விருந்தினர்களாக கீழ்க்குறிப்பிட்டோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதற்கமைய பிற்பகல் 12.30 மணிக்கு யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளையில் யாழ். போதனா வைத்தியசாலை டாக்டர் திருமதி துஷ்யந்தி துசிதரன், காலை 10.30 மணிக்கு காங்கேசன்துறை மக்கள் வங்கிக் கிளையில் யாழ். போதனா வைத்தியசாலை டாக்டர் திருமதி எல்.ஜே. நோபேட் எமில், காலை 10.30 மணிக்கு யாழ். பிரதான வீதி மக்கள் வங்கிக் கிளையில் யாழ். கோட்டக் கல்வி அதிகாரி திருமதி வசந்திமாலா சிவபாலன், காலை 9 மணிக்கு ஊர்காவற்றுறை மக்கள் வங்கிக் கிளையில் தம்பாட்டி அரசினர் த.க. பாடசாலை கஸ்ரல் றோய், பிற்பகல் 12 மணிக்கு நெல்லியடி மக்கள் வங்கிக் கிளையில் கிராமிய வங்கி முகாமையாளர் திருமதி அரியமலர் நேசராஜா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

அத்துடன் காலை 10 மணிக்கு அச்சுவேலியில் மக்கள் வங்கிக் கிளையில் புத்தூர் அரசினர் வைத்தியசாலை டாக்டர் செல்வி விஜயலக்ஷ்மி சபாரட்ணம், நண்பகல் 12 மணிக்கு சங்கானை மக்கள் வங்கிக் கிளையில் வலிகாமம் மேற்கு உதவி அரச அதிபர் திருமதி தேவநந்தினி பாபு, பிற்பகல் 12.30 மணிக்கு சுன்னாகம் மக்கள் வங்கிக் கிளையில் உள்ளூராட்சித் திணைக்கள உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார், காலை 11.30 மணிக்கு சாவகச்சேரி மக்கள் வங்கிக் கிளையில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி பிரதி அதிபர் திருமதி ஜீட்சி ராஜ், காலை 11 மணிக்கு வல்வெட்டித்துறை மக்கள் வங்கிக் கிளையில் வல்வெட்டித்துறை உப தபாலதிபர் திருமதி பவானி கருணாகரன், காலை 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மக்கள் வங்கிக்கிளையில் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம், காலை 10 மணிக்கு யாழ். கன்னாதிட்டி மக்கள் வங்கிக் கிளையில் யாழ். மேலதிக அரச அதிபர் திருமதி. ரூபினி வரதலிங்கம், காலை 11 மணிக்கு பருத்தித்துறை மக்கள் வங்கிக் கிளையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை டாக்டர் நந்தகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஸ்ரீ-2)

# வேகம் குறைந்த வாகனங்களுக்கு அதிவேகப் பாதையில் அனுமதியில்லை

(கொழும்பு)

கொட்டாவவிலிருந்து மாத்தறையிலுள்ள கொடகம வரையான அதிவேகப் பாதையில் மணிக்கு 100 கிலோ மீற்றர் வேகத்தில் செல்ல முடியாத டிராக்டர்கள், மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கர வண்டிகள் போன்ற வாகனங்கள் அனுமதிக்கப்படமாட்டாதென அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது யாவருக்கும் பொதுவான வீதியல்ல. இந்த வீதிக்கு பொருத்தமான வாகனங்கள் மட்டும்தான் பெருந்தெருவில் பயணிக்க முடியுமென வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் ரஞ்சித் பிரேமஸ்ரீ தெரிவித்துள்ளார்.

இந்த வீதியை பயன்படுத்துவது பற்றி பொதுமக்கள், வாகன உரிமையாளர்கள், சாரதிகள், பாதசாரிகள் ஆகியோருக்கு அறிவுறுத்தப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

இந்த வீதியில் விசேட பொலிஸ் பிரிவு, துணை மருத்துவ சேவையினர், தீயணைக்கும் படை ஆகியவை கடமையிலிருக்கும். இந்த விசேட சேவைகள் அமைந்த பின்னரே இந்த வீதி பாவனைக்கு விடப்படும்.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதமளவில்தான் இது நடைபெறுமென துறைமுகங்கள் பெருந்தெருக்கள் அமைச்சின் செயலாளர் சுஜாதா குரே தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# உள்ளூராட்சி சபை பிரதானிகளுக்கு தீர்வை வரியற்ற அனுமதிப் பத்திரம்

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைகளின் பிரதானிகள் மற்றும் பிரதி பிரதானிகளுக்கு தீர்வை வரியற்ற வாகன அனுமதி பத்திரங்கள் எதிர்வரும் வாரம் வெளியிடப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான தகவல்களை மாகாண மற்றும் உள்ளூராட்சி சபைத்துறை அமைச்சின் செயலாளர் நிஹால் ஜயதிலக்க தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபைகளில் 4 வருடங்கள் சேவையாற்றிய பிரதானிகள் மற்றும் பிரதி பிரதானிகளுக்கே இந்த வரப்பிரசாதம் கிடைக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் அண்மையில் இடம் பெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வெற்றிபெற்ற உறுப்பினர்களுக்கு இந்த வாய்ப்பு கிடைக்காது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# புத்தாண்டு தினத்தில் மின்சார விநியோகத்தடைக்கு மாற்று ஏற்பாடு

(கொழும்பு)

புத்தாண்டு தினத்தில் மின்சார விநியோகத் தடை ஏற்படாத வண்ணம் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக மின்சார சபை தெரிவித்துள்ளது.

இந்தக் காலப்பகுதியில் அவசர மின்சார விநியோகத்தடை ஏற்படும் பட்சத்தில் 1987 என்ற துரித தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளுமாறு சபையின் தலைவர் வித்தியா அமரபால கோரியுள்ளார்.

குறித்த இலக்கத்தின் ஊடாக மின்சார சபையை தெளிவூட்டும் நிலையில் மீண்டும் மின்சார விநியோகத்தை பெற்றுக் கொள்ள முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

இது தவிர 1910 என்ற அவசர இலக்கத்துடனும் தொடர்பு கொள்ள முடியும் என அவர் குறிப்பிட்டார்.

பண்டிகைக் காலத்தில் மின்சார கட்டுப்பாட்டு நிலையங்களில் பணிபுரிவதற்காக படிமுறை அடிப்படையில் பணியாளர்களை நியமித்துள்ளதாகவும் மின்சார சபையின் தலைவர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# இடம்பெயர்ந்தோர் முகாம்களிலுள்ள மக்களை த.தே.கூ. சந்திக்கும்

வடக்கில் இடம்பெயர்ந்தோர் முகாம்களில் தங்கியிருக்கின்ற எஞ்சிய மக்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சந்திக்கவுள்ளது.

அரசாங்கத்திற்கும் தமது கட்சிக்கும் இடையே இடம்பெற்ற சந்திப்புகளின்போது விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு இணங்கவே இந்த வாய்ப்பு கிடைத்துள்ளதாக கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பி.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

தற்சமயம் இடம்பெயர்ந்தோர் முகாம்களில் தங்கியிருக்கின்றவர்களின் விபரங்கள் மற்றும் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விபரங்களையும் நாளை மறுதினம் அரசாங்கம் வெளியிடும் என தாம் எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

2011.04 14

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்



★ 1849 - ஹங்கேரி ஆஸ்திரியாவிலிருந்து விடுதலையை அறிவித்தது.

★ 1865 - அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் ஜோன் வில்க்ஸ் பூத் என்பவனால் சுடப்பட்டார்.

★ 1894 - தோமஸ் எடிசன் ஒளிப்படங்களைப் பாவித்து அசையும் படக்காட்சியை காட்டும் கினட்டஸ்கோப் (kineto scope) என்ற அசையும் ஒளிப்படக் கருவியை காட்சிப்படுத்தினார்.

★ 1912 - பிரித்தானியாவின் பயணிகள் கப்பல் டைட்டானிக் வட அட்லாண்டிக் கடலில் பனிப்பாறை ஒன்றுடன் மோதியது. அடுத்த நாள் இது ஆயிரத்து 503 பேருடன் கடலில் மூழ்கியது.

★ 1915 - துருக்கி ஆர்மீனியாவை முற்றுகையிட்டது.

★ 1940 - இரண்டாம் உலகப் போர்: பிரித்தானிய கடற்படையினர் நோர்வேயின் நம் சோஸ் என்ற இடத்தில் தரையிறங்கினர்.

★ 1944 - மும்பை துறைமுகத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 300 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1958 - சோவியத்தின் ஸ்புட்னிக் 2 என்ற செய்திமதி 162 நாட்கள் பூமியை சுற்றிய பின்னர் சுற்றுவட்டத்தில் இருந்து வீழ்ந்தது.

★ 1978 - ஜோர்ஜியாவில் ஜோர்ஜிய மொழியின அரசியல் அந்தஸ்தை மாற்றும் சோவியத் ஆட்சியாளரின் முயற்சிக்கெதிராக திபிலீசியில் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி இடம்பெற்றது.

★ 1986 - மேற்கு பெர்லினில் ஏப்ரல் 5 இடம் பெற்ற குண்டுவெடிப்பில் இரண்டு அமெரிக்கப் படைவீரர் இறந்ததற்குப் பழிவாங்கும் முகமாக ஜனாதிபதி ரொனால்ட் ரேகன் உத்தரவின் பேரில் ஐக்கிய அமெரிக்கா லிபியாவில் குண்டு வீச்சை நிகழ்த்தியதில் 60 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1986 - வங்காளதேசில் ஒரு கிலோ கிராம் எடையுள்ள பனிக்கட்டி மழை பொழிந்ததில் 92 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1988 - சுவிட்சர்லாந்தில் ஜெனீவாவில் ஐ.நா அவையில் இடம் பெற்ற நிகழ்வில் சோவியத் ஒன்றியம் ஆப்கானிஸ்தானில் இருந்து தனது படைகளைத் திரும்பப் பெறும் உடன்பாட்டில் கைச்சாத்திட்டது.

★ 1999 - யூகொஸ்லாவியாவில் நேட்டோ படைகள் அல்பேனிய அகதிகளை ஏற்றிச் சென்ற ஊர்தி ஒன்றின் மேல் குண்டு வீச்சு நடத்தியதில் 75 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1999 - அவுஸ்திரேலியா, சிட்னியில் பலமான பனிக்கட்டி மழை பொழிந்ததில் 1.7 பில்லியன் டொலர் பெறுமதியான சேதம் ஏற்பட்டது.

★ 2007 - தாய்லாந்து நீர்வீழ்ச்சியில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் 35 பேர் கொல்லப்பட்டனர்.

### பிறப்புகள்

★ 1629 - கிறிஸ்டியான் ஹைஜன்ஸ், டச்சு கணிதவியலாளர் (இ. 1695)

★ 1891 - அம்பேத்கர், இந்திய சட்ட நிபுணர் (இ. 1956)

★ 1922 - அலிஅக்பர்கான், இந்துஸ்தானி இசைக் கலைஞர் (இ. 2009)

★ 1927 - அலன் மக்டேர்மிட் , நோபல் பரிசு பெற்றவர்

### இறப்புக்கள்

★ 1930 - விளாடிமிர் மயக்கோவ்ஸ்கி, ரஷ்ய எழுத்தாளர் (பி.1893)

★ 1950 - றமணமகரிஷி, தமிழகத்தைச் சேர்ந்த ஆன்மீகவாதி (பி.1879)

# கிழக்கில் காணி உரிமையாளர்களை அடையாளம் காண விசேட திட்டம்

(கொழும்பு)

கிழக்கு காணி உரிமையாளர்களை அடையாளம் காண்பதற்கு விசேட திட்டமொன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளது. காணி உரிமையாளர்கள் பிரதேச செயலாளரிடம் சான்றிதழ் ஒன்றை சமர்ப்பிக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளினால் பலவந்தமாக குடியேற்றப்பட்டவர்களுக்கு காணி உறுதிகள் வழங்கப்படமாட்டாது என தெரிவிக்கப்படுகிறது.

சரியான ஆவணங்களை சமர்ப்பிக்கும் நபர்களுக்கு மட்டுமே காணி உறுதிகள் வழங்கப்படும் என கிழக்கு மாகாண காணி ஆளுநர் டி.சீ.அனுர தர்மதாச தெரிவித்துள்ளார். கிழக்கு மாகாணத்தில் நிலவும் காணி உரிமை தொடர்பான பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணும் நோக்கில் அரசாங்கம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

புலிகளினால் குடியேற்றப்பட்ட மக்களுக்கும் உண்மையான காணி உரிமையாளர்களுக்கும் இடையில் காணிப் பிரச்சினை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

## க.பொ.த.(சா/த) பரீட்சைப் பெறுபேறுகள்

யா/கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்

தே. கேதினி (6ஏ 2பி சி), அ. கசிலினி (3ஏ 3பி 3சி), அ. தசிலினி (2ஏ பி 4சி 2எஸ்), அ.அனுசுயா (2ஏபி3சி2எஸ்). (2)

## அஞ்சல் நிலையங்களில் முத்திரைகளுக்கு தட்டுப்பாடு

நாடெங்கிலும் உள்ள பல அஞ்சல் நிலையங்களில் முத்திரைகளுக்கு பற்றாக் குறை காணப்படுவதாக தகவல்கள் வெளியாகி இருந்தன.

குறிப்பாக 5 ரூபாய் மற்றும் 10 ரூபாய்களுக்கான முத்திரைத் தலைகளுக்கு பற்றாக் குறை காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக பிரதி அஞ்சல் மா அதிபர் ஆர்.டீ.ஆர்.காமினி தெரிவிக்கையில்,

கடந்த நாட்களில் மேற்கொள்ளப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கைகளால் இந்த நிலைமை ஏற்பட்டதாகவும் எவ்வாறாயினும் தற்போது பல அஞ்சல் நிலையங்களுக்கான முத்திரைத் தலைகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (2)

# நாட்டில் தொலைபேசிப் பாவனை அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையில் தொலைபேசிப் பாவனை துரிதமாக அதிகரித்துச் செல்வதாக தொலைத் தொடர்புகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சு குறிப்பிடுகின்றது.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், இந்த வருடத்தின் முதற் பகுதியிலேயே தொலைபேசிப் பாவனை 15 தொடக்கம் 20 சதவீதமாக அதிகரித்துள்ளதாக அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் சனத்தொகையில் 75 வீதமானவர்கள் தொலைபேசிகளைப் பயன்படுத்துவதாகவும் தொலைத் தொடர்புகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் மேலும் குறிப் பிட்டார்.

(ஸ்ரீ-2)

# இந்தியாவிலிருந்து சேலைன் கொள்கலன்கள் இறக்குமதி

(கொழும்பு)

சேலைன் கொள்கலன்கள் கப்பல் மூலம் நேற்று முன்தினம் நாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தியாவிலிருந்து இந்த சேலைன் கொள்கலன்கள் கொண்டு வரப்பட்டதாக சுகாதார அமைச்சின் மருந்து விநியோகப் பிரிவின் பணிப்பாளர் டாக்டர் கமல் ஜயசிங்க குறிப்பிட்டார்.

நாட்டிலுள்ள வைத்தியசாலைகளில் தற்போது எவ்வித பற்றாக்குறைகளும் இன்றி போதுமானளவு சேலைன்கள் இருப்பதாக சுகாதார அமைச்சின் மருந்து விநியோகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, பற்றாக்குறை நிலவும் புற்றுநோய்க்கான மருந்துப் பொருட்களை உள்நாட்டு விநியோகஸ்தர்களிடம் இருந்து கொள்வனவு செய்து வைத்தியசாலைகளுக்கு வழங்கியுள்ளதாகவும் மருந்து விநியோகப்பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## விசேட பஜனை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் இன்று வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு விசேட பஜனை நடை பெறும். (ஸ்ரீ-2)

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

வேலணைப் பிரதேச செயலகத்தின் இம் மாதத்திற்கான ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டமும் விவசாய அபிவிருத்திக் குழுக்கூட்டமும் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாகவும் இக்கூட்டங்கள் தொடர்பான திகதி, விபரங்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு பின்னர் அறியத்தரப்படும் என பிரதேச செயலாளர் மு.நந்தகோபாலன் அறிவித்துள்ளார்.

இக்கூட்டங்கள் எதிர்வரும் 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)


அனைவருக்கும் இனிய சித்தரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

ලංකා லங்கா LANKA

Hyrax
CEYPETCO
Lubricants

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் அங்கீகரிக்கப்பட்ட உராய்வு நீக்கி எண்ணை வகைகள் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மாத்திரமே பெற்றுக்கொள்ள முடியும்.



இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
யாழ் ஏக விநியோகஸ்தர்
எஸ்.பி.என். மோட்டோர்ஸ்
48/1, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.



வாழ்த்துகின்றோம்

சேவை செய்வது ஆனந்தம். அதை திறம்படச் செய்வதென்றால் பேரானந்தம். இது உங்களுக்கே சாரும்.

திரு. நா.தனேந்திரன்



பணிவுடன் நின்றீர்கள்
தொடர்ந்து செயற்பட்டீர்கள்
மக்கள் மனம் கவர்ந்தீர்கள்
பட்டங்கள் பதவிகள் பெற்றீர்கள்
தானம் தருமம் பல புரிந்தீர்கள்
தன்னிகரில்லா பட்டம் பெற்றீர்கள்
மென்மேலும் சேவை தொடர திருப்பதி வெங்கடேசன் துணை புரிவாராக!

வாழ்த்துவோர்:
ராஜா பென்சி
சக ஊழியர்கள்

153, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
(4482)



ஜுவலறி உரிமையாளர்கள், ஊழியர்கள், நகைப்பிரியர்கள், அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் யாவருக்கும் இதயம் கனிந்த புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றார்கள்.

நவீன தொழில் நுட்பத்தில் என்றும் ரம்மியமான, சகல விதமான ஆபரண கட்டிங் வேலைகட்கு!



அன்ரனி ஜீவல்ஸ்
Antony Jewels
டிசைனேர்ஸ்
Designers

இல.149-4A
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ. பே: 021 222 4392, 077 6264650
(4485)

# வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தால் இடமாற்றம் பெறும் ஆசிரியர் விபரம் வெளியீடு

(மருதனார்மடம்)

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் 2011ஆம் ஆண்டிற்கான மாவட்டங்களுக்கிடையில் வருடாந்த ஆசிரியர் இடமாற்றம் பெறுவோர் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வாறு இடமாற்றம் பெறும் ஆசிரியர்கள் இரண்டாம் தவணைக்காக பாடசாலையில் எதிர்வரும் 25ஆம் திகதி ஆரம்பமாகும் போது கடமையைப் பொறுப்பேற்க வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இடமாற்றப்படும் ஆசிரியர் விபரம் வருமாறு,

**தீவகக் கல்வி வலயத்திலிருந்து வவுனியா தெற்கு கல்வி வலயத்திற்கு இடமாற்றப்படுவோர் விபரம்:**

திருமதி.ஜி.ரஞ்சித்குமார் (யா/சென். அன்ரனிஸ் கல்லூரி), திருமதி.கே.பத்மநாதன் (யா/நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தி.), திருமதி.பி.அமலன் (யா/நயினாதீவு கணேசா வித்தி.), திருமதி.வி.பத்மநாதன் (யா/நயினாதீவு கணேசா வித்தி.).

**யாழ்.கல்வி வலயத்திலிருந்து மன்னார் கல்வி வலயத்திற்கு இடமாற்றப்படுவோர் விபரம்:**

அருட்சகோதரி லோட் மரியசீலி மரியதாஸ் (யா/சென்.றொக்ஸ் றோ.க.வி.), அருட்சகோதரி மேரியம்மா சந்தியப்பிள்ளை (யா/திருக்குடும்ப கன்னியர் மடம்), திருமதி. வை.வடிவேல் (யா/கோப்பாய் தெற்கு கந்தவேல் த.க.பாடசாலை).

**யாழ்.கல்வி வலயத்திலிருந்து வவுனியா தெற்கு கல்வி வலயத்திற்கு இடமாற்றப்படுவோர் விபரம்:**

எஸ்.பஞ்சநாதன் (யா/கோப்பாய் தெற்கு கந்தவேல் த.க.பாடசாலை), திருமதி.வி. கருணாகரன் (யா/கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தி.)

**கிளிநொச்சி கல்வி வலயத்திலிருந்து வலிகாமம் கல்வி வலயத்திற்கு இடமாற்றப்படுவோர் விபரம்:**

திருமதி.ஏ.ஆனந்தசொரூபன் (கிளி/பளை றோ.க.த.க.பாடசாலை), திருமதி.ஏ. மனோகரன் (கிளி/பளை மத்திய கல்லூரி), திருமதி.ஜி.சிவமோகன் (கிளி/நாச்சிக்குடா அரசினர் தமிழ் கலவன் பாடசாலை), திருமதி.ஜி.சிவசுதன் (கிளி/சோரன்பற்று சி.சி.ரி.எம்.எஸ்.), ஐ.விக்னேஸ்வரன் (கிளி/இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை), செல்வி.ஜே.பாலநாதன் (கிளி/சென்.தெரெசா மகளிர் கல்லூரி), திருமதி. ஜே.தேவராஜா (கிளி/சிவநகர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை), செல்வி.கே. முத்துக்குமாரசுவாமி (கிளி/பளை றோ.க.த.க.பாடசாலை), கே.ஸ்ரீகரன் (கிளி/பூநகரி நல்லூர் ம.வி.), திருமதி.கே.விஜிதரன் (கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி), திருமதி. அருள்வேந்தன் (கிளி/கனகபுரம் ம.வி.), திருமதி.எம்.கே.ஜெயரஞ்சன் (கிளி/சிவபாத கலையகம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை), திருமதி.ஆர்.உதயகுமாரன் (கிளி/ஜெயபுரம் ம.வி.), திருமதி.எஸ்.கமலபாபு (கிளி/இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை), திருமதி.எஸ்.மணிவண்ணன் (கிளி/கனகபுரம் ம.வி.), திருமதி. எஸ்.பிரபாதாஜ் (கிளி/அக்கராயன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை), திருமதி.எஸ். இராமநாதன் (கிளி/கனகாம்பிகைகுளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை), செல்வி. எஸ்.செல்லத்துரை (கிளி/ஜெயபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை), திருமதி.எஸ். ஸ்ரீலோகேஸ்வரன் (கிளி/கனகபுரம் ம.வி.), எஸ்.திருமூர்த்தி (கிளி/செம்பன்குன்று அரசினர் தமிழ் கலவன் பாடசாலை), திருமதி. ஜே.சிவகௌரி (கிளி/சென்.பற்றிமா றோ.க.வி.), திருமதி.ரி.மயூரன் (கிளி/கனகாம்பிகைகுளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை), ரி.மோகனபாலன் (கிளி/வலயக் கல்விப் பணிமனை), திருமதி.ரி.சிவலிங்கம் (கிளி/இராமநாதபுரம் தெற்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை), திருமதி.ரி.சிவயோகராஜா (கிளி/சிவநகர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை), திருமதி.ரி.சுதாஜி (கிளி/அக்கராயன் ம.வி.), திருமதி.வீ.கிருபராஜா (கிளி/முருகானந்தா ம.வி.), திருமதி.வி.குகதாசன் (கிளி/சென்.தெரேசா மகளிர் கல்லூரி), வை.இளங்கீரன் (கிளி/ஜெயபுரம் ம.வி.), எம்.செல்வநாயகம் (கிளி/வீரவேல் ம.வி.), திருமதி.என்.சரவணன் (கிளி/பாரதி வித்தி.), திருமதி.என்.வேணுகோபாலன் (கிளி/இராமநாதபுரம் தெற்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை).

**மடு கல்வி வலயத்திலிருந்து வலிகாமம் கல்வி வலயத்திற்கு இடமாற்றப்படுவோர் விபரம்:**

எஸ்.பெனடிக்ற் (மன்/மரத்திக்கன்னட்டி றோ.க.த.க.பா.), எஸ்.ரஜீவன் (மன்/கட்டையடம்பன் றோ.க.த.க. பாடசாலை).

**மன்னார் கல்வி வலயத்திலிருந்து வலிகாமம் கல்வி வலயத்திற்கு இடமாற்றப்படுவோர் விபரம்:**

திருமதி.எம்.சந்திரகுமார் (மன்/சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி), திருமதி.பி.சைலினி (மன்/சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி), ரி. ஜெயக்குமார் (மன்/தலைமன்னார் அ.த.க.பா.), திருமதி.வை.சிவானந்தராஜா (மன்/புனித வளனார்).

**முல்லைத்தீவு கல்வி வலயத்திலிருந்து வலிகாமம் கல்வி வலயத்திற்கு இடமாற்றப்படுவோர் விபரம்:**

திருமதி.ஏ.ஜெகதீஸ்வரன் (மு/தண்ணீரூற்று ம.வி.), ஏ.மங்களதாஸ் (மு/வட்டுவாய்க்கால் அ.த.க.பா.), ஏ.தம்பிராஜா (மு/பாரதி வித்தி.), திருமதி.ஐ.விஜயரட்ணம் (மு/ஆனந்தபுரம் ம.வி.), கே.சுப்பிரமணியம் (மு/கொக்குளாய் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை), திருமதி.எல்.பாலகிருஷ்ணன் (மு/வேணாவில் ஸ்ரீ முருகானந்தா வித்தி.), திருமதி.என்.மேரிபிரேமா (மு/இரணைப்பாலை றோ.க.ம.வி.), திருமதி.பி.பாலகிருஷ்ணன் (மு/விஸ்வமடு ம.வி.), திருமதி.பி.இரட்ணராஜா (மு/உடையார்கட்டு ம.வி.), ஆர்.இராகுலன் (மு/கைவேலி கணேசா வித்தி, திருமதி. ஆர்.திருவருட்செல்வன் (மு/விஸ்வமடு ம.வி.), யு.நிருபானந்தன் (மு/வல்லிபுனம் யு.எச்.எம்.வி.), திருமதி.வி.சுப்பிரமணியம் (மு/கொக்குளாய் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை).

**துணுக்காய் கல்வி வலயத்திலிருந்து வலிகாமம் கல்வி வலயத்திற்கு இடமாற்றப்படுவோர் விபரம்:**

திருமதி.ஐ.பிரதீபன் (மு/மல்லாவி மத்திய கல்லூரி), திருமதி ஜே.சிவானந்தன் (மு/தேரன்கண்டல் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை), கே.யூட் சிவாகரன் (மு/யோகபுரம் ம.வி.), கே.கிருஷ்ணானந்தா (மு/பாண்டியன்குளம் ம.வி.), திருமதி.எல்.புவனதாஸ் (மு/ஒட்டுசுட்டான் ம.வி.), செல்வி ஆர்.இராசதுரை (வலயக் கல்விப் பணிமனை), திருமதி.எஸ். கிருஷ்ணானந்தா (மு/பாலிநகர் ம.வி.), எஸ். திலகதீபன் (மு/வன்னிவிளாங்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை), திருமதி. வை.சுயந்தி (மு/பாண்டியன்குளம் ம.வி.), திருமதி.ரி.சுபரஞ்சன் (மு/நட்டாங்கண்டல்), செல்வி.யு.கேதாரகௌரி (யா/புன்னாலைக்கட்டுவன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை).

**வவு.வடக்கு கல்வி வலயத்திலிருந்து வலிகாமம் கல்வி வலயத்திற்கு இடமாற்றப்படுவோர் விபரம்:**

செல்வி.ஜே.தங்கராஜா (வ/ஓமந்தை மத்திய கல்லூரி), கே.கெங்காதரகீர்த்தி (வ/மரவிலுப்பை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை), திருமதி.ரி.குணசீலன் (வ/கோவில் புளியங்குளம் முத்தமிழ் வித்தி.).

**வவு.தெற்கு கல்வி வலயத்திலிருந்து வலிகாமம் கல்வி வலயத்திற்கு இடமாற்றப்படுவோர் விபரம்:**

ஏ.செந்தில்குமாரானந்தா (வ/கணேசபுரம் விநாயகர் வித்தி.), திருமதி.சி.ஜெயகாந்தன் (வ/இந்துக் கல்லூரி), திருமதி.ஜி.அருள்லிங்கம் (வ/தம்பானைச்சோலை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை), திருமதி.ஜே.ஜூயினியா (வ/திருஞானசம்பந்தர் வித்தி.), கே.குணசீலன் (வ/கணேஸ்வரா வித்தி.), திருமதி.கே.செந்தில்குமாரானந்தா (வ/கணேசபுரம் விநாயகர் வித்தி.), திருமதி.எஸ்.ஜெயக்குமார் (வ/நெளுக்குளம் கலைமகள் வித்தி.), திருமதி.எஸ்.ஜெயரமணன் (வ/நெளுக்குளம் கலைமகள் வித்தி.), திருமதி.எஸ்.சத்யானந்தன் (வ/பூவரசங்குளம் ம.வி.), செல்வி.வி.தம்பிராஜா (வ/விபுலானந்தா கல்லூரி), திருமதி.வி.விமலச்சந்திரன் (வ/வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்).

**கிளிநொச்சி கல்வி வலயத்திலிருந்து யாழ்.கல்வி வலயத்திற்கு இடமாற்றப்படுவோர் விபரம்:**

திருமதி.ஏ.கே.மார்க் வெஸ்லி (கிளி/சிவபாதகலையகம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை), செல்வி.ஏ.மேரி ஆன் போஷியா (கிளி/மேசர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை), ஏ.பி.சந்தியா (கிளி/பூநகரி ம.வி.), திருமதி.சி.ஏ.கஜவதனன் (கிளி.செல்வநாயகர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை), ஜீ.காண்டீபன் (கிளி/முருகானந்தா ம.வி.), அருட்சகோதரி ஜி.எம்.ஸ்ரெனிஸ்லாஸ் (கிளி/நாச்சிக்குடா ஜி.எம்.எம்.எஸ்.), செல்வி.ஜி. ராமர் (கிளி/கனகபுரம் ம.வி.), திருமதி.ஜே. பிரபாகரன் (கிளி/பாரதி வித்தி.), திருமதி.ஜே. சிவலிங்கம் (கிளி/சிவநகர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை), திருமதி.கே.சந்திரகுமார் (கிளி/ஜெயபுரம் ம.வி.), செல்வி.கே.இன்பவதனி (கிளி/செல்வநாயகர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை), செல்வி.கே.நடராஜா (கிளி/இராமநாதபுரம் ம.வி.), திருமதி.கே.சரவணபவானந்தமூர்த்தி (கிளி/கிளிநொச்சி ம.வி.), திருமதி.கே.சீவரட்ணம் (கிளி/கிராஞ்சி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை), திருமதி.கே.சிவானந்தன் (கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி), கே.விஜயகரன் (கிளி/தர்மபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை), திருமதி. எல்.ரூபராஜ் (கிளி/குமாரசாமிபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை), திருமதி.எம்.ஏ. சிவநாதன் (கிளி/முருகானந்தா ம.வி.), எம். விஷ்ணுதேவன் (கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி), திருமதி.பி.நாகசீலன் (கிளி/நாகேந்திரா வித்தி.), திருமதி.ஆர்.பாலகரன் (கிளி/பளை மத்திய கல்லூரி), திருமதி.ஆர்.லட்சுமிகாந்தன் (கிளி/ஸ்கந்தபுரம் இல.1 அ.த.க. பாடசாலை), ஆர்.ரூபகுமார் (கிளி/முருகானந்தா ம.வி.), திருமதி.எஸ்.அன்ரனி அருள்தாஸ் (கிளி/பளை றோ.க.த.க.பா), திருமதி.எஸ். ஞானசர்மா (கிளி/பூநகரி நல்லூர் ம.வி.), திருமதி.எஸ்.ஜமுனாதரன் (கிளி/ஜெயபுரம் ம.வி.), திருமதி.எஸ்.ஜோன்சன் (கிளி/வேம்பொடுகேணி ம.வி.), எஸ்.யோகேந்திரன் (கிளி/கனகாம்பிகைக்குளம் அ.த.க.பா), எஸ். மகேந்திரராஜா (கிளி/கல்வெட்டித்திடல் நாகேஸ்வரா வித்தி.), திருமதி.எஸ்.புண்ணியமூர்த்தி (கிளி/தர்மபுரம் அ.த.க.பா.), திருமதி.எஸ்.சிவநாதன் (கிளி/ஞானியர்மட அ.த.க.பா.), திருமதி. எஸ்.தனபாலசிங்கம் (கிளி/முழங்காவில் ம.வி.), திருமதி.எஸ்.திலீபன் (கிளி/இராமநாதபுரம் ம.வி.), எஸ்.விமலராஜா (கிளி/அக்கராயன் ம.வி.), செல்வி.ரி.மதனகாந்தி (கிளி/ஆனையிறவு அ.த.க.பா.), திருமதி.ரி.நடேசு (கிளி/பரந்தன் ம.வி.), செல்வி.ரி.தியாகராஜா (கிளி/இராமநாதபுரம் ம.வி.), செல்வி.வி. குமாரசுவாமி (கிளி/கிளிநொச்சி ம.வி.), வி.லங்கநாதன் (கிளி/தர்மபுரம் ம.வி.), வி.லோகேஸ்வரன் (கிளி/பரந்தன் ம.வி.), திருமதி.வி.முத்துலிங்கம் (கிளி/பாரதி வித்தி.), திருமதி.வி.சிவகுமார் (கிளி/உமையாள்புரம் அ.த.க.பா.), திருமதி.வி.விஜயகுமார் (கிளிநொச்சி கிளாலி றோ.க.த.க.பா.), திருமதி.வேஜின் சத்தியன் (கிளி/தமிழ்ச்சோலை வித்தி.), திருமதி.வை. சிவதாசன் (கிளி/சிவபாதகலையகம் அ.த.க.பா.).

**மடு கல்வி வலயத்திலிருந்து யாழ்.கல்வி வலயத்திற்கு இடமாற்றப்படுவோர் விபரம்:**

திருமதி.ஜெ.யேசுதாசன் (மன்/அடம்பன் றோ.க.த.க.பா.), எஸ்.பத்மதாசன் (மன்/தேவன்பிட்டி றோ.க.வித்தி.), செல்வி.வி. செல்வராஜா (மன்/சின்னப்பண்டி விரிச்சான் அ.த.க.பா.).

**மன்னார் கல்வி வலயத்திலிருந்து யாழ்.கல்வி வலயத்திற்கு இடமாற்றப்படுவோர் விபரம்:**

பி.செல்லத்துரை (மன்/சென்.சேவியர் மகளிர் கல்லூரி), டி.எம்.நபான் (மன்/றிஸ். பதியுதீன் ம.வி.), திருமதி.ஜே.ஜி. சகாயநாதன் (மன்.நானாட்டன் ம.வி.), கே.செந்தில்நேசன் (மன்/சென்.சேவியர் ஆண்கள் கல்லூரி), திருமதி.எல்.எச்.மூர்த்தி (மன்/சென்.மேரிஸ் பெண்கள் வித்தி.), திருமதி. எல்.ஆர்.தர்மபூபதி (மன்/நானாட்டான் ம.வி.), என்.ஆர்.பாலசிங்கம் (மன்/சென்.லோரன்ஸ் றோ.க.த.க.பா.), செல்வி.ஆர்.முருகன் (மன்/சென்.சேவியர் மகளிர் கல்லூரி), எஸ்.புஸ்பநாயகம் (மன்/சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி), அருட்சகோதரி எஸ்.துஸ்யந்தி (மன்/சென்.மேரிஸ் பெண்கள் ம.வி.), வி.யூதசதீஸ்குமார் (மன்/சின்னவளையன் கட்டு அ.த.க.பா.).

**முல்லைத்தீவு கல்வி வலயத்திலிருந்து யாழ்.கல்வி வலயத்திற்கு இடமாற்றப்படுவோர் விபரம்:**

ஏ.லீனஸ் (மு/அலம்பில் றோ.க.வித்தி.), திருமதி.ஏ.நல்லிக்குமரன் (மு/பாரதி வித்தி.), திருமதி.கே.ஜெயசீலன் (மு/குமுழமுனை ம.வி.), எம்.கிளான் (மு/இந்து தமிழ் ம.வி.), திருமதி.எம்.என்.டொன் பொஸ்கோ (மு/புதுக்குடியிருப்பு ம.வி.), திருமதி.எம்.பிரேமானந் (மு/வல்லிபுனம் ம.வி.), திருமதி.எம். பி.ரஞ்சன் றொபேட் (மு/தண்ணீரூற்று ம.வி.), என்.சாந்தகிரிநாதன் (மு/வல்லிபுனம் ம.வி.), திருமதி.பி.பேரானந்தம் (மு/பாரதி வித்தி.), திருமதி.ஆர்.தவராஜசிங்கம் (மு/நெத்தலியாறு த.ம.வி.), திருமதி.எஸ்.கிருஷ்ணதாஸ் (மு/உடையார்கட்டு ம.வி.), திருமதி.எஸ். இராதாகிருஷ்ணன் (மு/கைவேலி கணேசா வித்தி.), எஸ்.சுரேஸ்நாதன் (மு/ஸ்ரீ சுப்பிரமணியம் வித்தி.), ரி.ஜெயசுதன் (மன்/பரிகரி கண்டல் அ.த.க.பா.), திருமதி.ரி.நிரஞ்சன் (மு/விஸ்வமடு ம.வி.), செல்வி.ரி.தெய்வமணி (மு/விஸ்வமடு ம.வி.), செல்வி.வீ. கந்தசாமி (மு/உடையார்கட்டு ம.வி.), திருமதி.வீ.பொன்னம்பலம் (மு/குறவில் த.ம.வி.).

**துணுக்காய் கல்வி வலயத்திலிருந்து யாழ்.கல்வி வலயத்திற்கு இடமாற்றப்படுவோர் விபரம்:**

திருமதி.ஏ.பி.பெலிசியா குரூஸ் (மு/யோகபுரம் ம.வி.), திருமதி.டி.என்.எஸ். விஜயகாந் (மு/பாலிநகர் ம.வி.), திருமதி. யூட் தயாபதி (மு/துணுக்காய் அ.த.க.பா.), எம்.கிருபாகரன் (மு/கச்சிலாய்மடு அ.த.க.பா.), திருமதி.எம்.இராஜேஸ்வரன் (மு/தேரங்கண்டல் அ.த.க.பா.), திருமதி.பி. ஜெயராஜா (மு/தேரங்கண்டல் அ.த.க.பா.), ஆர்.நிமலரஞ்சன் (வலயக் கல்விப் பணிமனை), திருமதி.ஆர்.ரவிந்திரன் (மு/உயிலங்குளம் அ.த.க.பா.), திருமதி.எஸ்.அருமைநாயகம் (மு/யோகபுரம் ம.வி.), எஸ்.சிவகாந்தி (மு/உயிலங்குளம் அ.த.க.பா.), ரி.அருமைநாயகம் (மு/வவுனிக்குளம் நிலை 4 அ.த.க.பா.), ரி.சுரேன் (மு/ஐயங்கன்குளம் அ.த.க.பா.), திருமதி.வி.திருக்குமரன் (மு/திருமுருகண்டி இந்து வித்தி.), திருமதி.ரி. வாசுகி (மு/புத்துவெட்டுவான் அ.த.க.பா).

(நாளை தொடரும்)

உயர்ந்த இலட்சியத்தை அடைய பல காதங்கள் பயணம் செல்லவேண்டும். ~கார்லைல்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## 'கர' புத்தாண்டே நீதான் எங்களுக்காகப் பிறக்கிறாய்

புத்தாண்டு இன்று பிறக்கின்றது. வாக்கியமும், திருக்கணிதமும் தமிழர் பண்பாட்டை தப்பாமல் கடைபிடித்து இருவேறு நேரங்களை அறிவித்துள்ளன.

பிறக்கின்ற வருடத்தின் நேரம் சரியாகத் தெரியாத நிலையில், இரண்டு பஞ்சாங்கங்களும் குறித்து நிற்கின்ற நேரங்களுக்கு அப்பால் நிச்சயம் புத்தாண்டு பிறந்திருக்கும். எனவே 'கர' வருடம் பிறப்பதாக இரண்டு பஞ்சாங்கங்களும் குறிப்பிட்ட நேரத்திற்குப் பின்னர் ஆலயம் சென்று இறைவனை வழிபடலாம் என்பது எமது முடிபு.

இதில் வாக்கிய பஞ்சாங்கக் கட்சியின் ஆதரவாளர்களும் திருக்கணித பஞ்சாங்கக் கட்சியின் ஆதரவாளர்களும் தத்தம் விருப்புப்படி செய்யலாம். அதற்கு நாம் எவ்வகையிலும் தடையில்லை.

ஆனால் புத்தாண்டின் பிறப்பு என்பது குறித்த ஒரு நேரமாக இருக்கமுடியுமே அன்றி இரு நேரமாக இருக்கமுடியாதென்பது நிச்சயமான உண்மை. எனினும் புத்தாண்டின் பிறப்பான இன்றைய நன்நாளில் உண்மைகளைக் கூறி எவரையும் குழப்ப விரும்பாமையால் அதனை அப்படியேவிட்டு விடலாம்.

அதேநேரம் பிறக்கின்ற 'கர' புத்தாண்டு ஈழத் தமிழர்களின் விடிவுக்காக பிறப்பது போன்ற நினைப்பு எம் மனதில் எழுந்துள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றச் சாட்டுத் தொடர்பாக ஐ.நா. நிபுணர்கள் மேற்கொண்ட அறிக்கை நீ (கர புத்தாண்டு) பிறப்பதற்காக பிரசவ வேதனைப்படும் வேளையில் ஐ.நா. செயலாளரிடம் கையளிக்கப்பட்டது. கூடவே இலங்கை அரசுக்கும் அதன் பிரதி வழங்கப்பட்டது.

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையை பெற்றுக்கொண்ட இலங்கை அரசு, அறிக்கை பாரபட்சமானது என அறிக்கை வெளியிட்டுள்ளது.

ஐய! நீ பிறப்பதற்கு நாள் குறித்த வேளையில் அமெரிக்கா மீண்டும் ஒரு முறை இலங்கையை அதட்டியது.

பிறக்கின்றவன் யோகம் செய்பவனாக இருந்தால் பிறப்பதற்கு முன்னமே நல்லது செய்வான் என்று சோதிடர்கள் கூறுவார்கள்.

அதனால் உன் பிறப்பு ஈழத்தமிழர்களுக்கு சாதகமாக அமையும் என்று நம்புகின்றோம்.

நீ பிறப்பது தமிழருக்கும் சிங்களவருக்குமாக இருந்தாலும், கடந்த ஆண்டுகள் எங்களை நிர்க்கதியாக்கி அகாஷி, விஜய் நம்பியார் போல ஆட்சியாளர் பக்கம் நின்று கொண்டன. ஆனால் நீ அப்படிச் செய்யமாட்டாய் என்று தெரிகிறது. ஏனெனில் நீ பிறப்பதற்கு முன்பாகவே உன் விளையாட்டை காட்டத் தொடங்கி விட்டாய். இனி விடமாட்டாய் என்பது தெரிகிறது.

ஓ! இதை நாம் கூறும் போது கடந்து செல்கின்ற விகிர்தி ஆண்டு திரும்பிப் பார்க்கிறது. கூடவே ஒரு முறைப்பும் முணுமுணுப்பும்.

உற்று கேட்கிறோம். சர்வதேச கிரிக்கெட்டில் விழுத்தி விட்டது யாராம்? இலங்கைக்கு எதிராக மனித உரிமை அமைப்புகள் போர்க்கொடி தூக்கியது எந்த ஆண்டிலாம்?

ஓ! விகிர்தி சொல்வதிலும் நியாயம் இருக்கிறது. சென்றுவா விகிர்தி. நன்றி கூறுகின்றேன் நீ அடுத்து வரும்போது உன்னை வரவேற்க வலம்புரி காத்திருக்கும்.

உன் மீள் வருகைக்கு அறுபது ஆண்டு ஆகும் என்பதால் நிச்சயம் நான் உன்னை வானில் இருந்து வாழ்த்துவேன்.

# மீள்குடியேறிய மக்களின் அடிப்படை தேவைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்

## விஜயகலா எம்.பியிடம் மீள்குடியேற்ற அமைச்சர் உறுதி



வலிகாமம் உட்பட இடம்பெயர்ந்து மக்கள் மீள்குடியேறியுள்ள 10 இடங்களை தெரிவு செய்து அங்கு மலசல கூடங்களை அமைப்பதுடன் நீர் இறைக்கும் இயந்திரங்களை வழங்குவதற்கு மீள்குடியேற்ற அமைச்சர் குணரட்ன வீரகோன் இணக்கம் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் குணரட்ன வீரகோனை ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் நேற்று முன்தினம் அமைச் சில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்திய போதே இதற்கான இணக்கம் காணப்பட்டுள்ளது. நேற்று பிற்பகல் 1.30 மணி முதல் 3.00 மணிவரை இந்தச் சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

வலிகாமம் பொல்லன்கலட்டி வித்தகபுரம் பகுதியில் மீளக்குடியேறியுள்ள மக்கள் அடிப்படை வசதிகளின்றி அல்லல் படுகின்றனர். அங்கு மலசல கூடங்கள் இல்லை. குடிநீருக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. மீள்குடியேறிய விவசாயிகள் விவசாயம் செய்ய முடியாது அல்லல் படுகின்றனர். எனவே இப்பகுதியில் மலசல கூடங்கள் அமைத்துக் கொடுப்பதுடன் தண்ணீர் இறைக்கும் இயந்திரங்களையும் வழங்க வேண்டும் என்று விஜயகலா மகேஸ்வரன் எம்.பி., அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேபோல் காரைநகர் மடத்தடி வளவு சீனோர் பகுதியில் மீளக்குடியேறியுள்ள மக்களுக்கு இத்தகைய அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதனைவிட மேலும் தெரிவு செய்யப்படும் எட்டு இடங்களிலும் உரிய அடிப்படை வசதிகளை மேற்கொள்வதற்கு அமைச்சு முன்வரவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதனையடுத்து வலிகாமம் உட்பட 10 இடங்களில் மீள்குடியேறி மக்களுக்கு உரிய மலசல கூட வசதிகளை மேற்கொள்வதற்கும் தண்ணீர் இறைக்கும் இயந்திரங்களை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் உறுதியளித்துள்ளார். இதற்கான வேலைத்திட்டங்கள் உடனடியாக ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார். இதேவேளை பொல்லங்கலட்டி வித்தகபுரம் மக்களில் குறைபாடுகள் தொடர்பில் யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மகிந்த கத்துரு சிங்கவிற்கு நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளார். (ச)

## இரத்த தானம்

பொற்பதி இந்து விளையாட்டு கழகத்தினால் புதுவருட தினத்தை முன்னிட்டு இரத்ததான நிகழ்வும், மென்பந்துத் துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியும் இன்று காலை 9 மணி தொடக்கம் பொற்பதி சரஸ்வதி முன்பள்ளியில் நிகழவுள்ளது. (ச-6)

# ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்

### "உண்மையைக் கூனி குறுக்க முயற்சிப்பவர்களை முடங்கிப்போக செய்வோம்" (யோ:8:51-59)

இக்காலத்தில் ஆண், பெண் எவரும் தங்கள் வயதைச் சொல்ல தயாரில்லை. பெண்ணின் அழகும், ஆணின் அந்தஸ்தும் வயதினுள் வடிவம் கொண்டிருப்பதாக நம்பிக்கை. இயேசுவின் காலத்து யூத சமுகத்திலும் இது போல ஒரு எண்ணம் மேலோங்கி இருந்தது எனலாம். ஆகவே தான் ''உனக்கு இன்னும் ஐம்பது வயது கூட ஆகவில்லை நீ ஆபிரகாமைக் கண்டிருக்கிறாயா?'' என்றுகேட்டார்கள்.

இயேசு யார் என்பதை புரிந்து கொள்ள மக்கள் எல்லாக் காலமும் முயன்று வந்துள்ளனர். இயேசுவின் போதனைகளைக் கேட்ட மனிதர்களின் பலர் அவரை நம்ப மறுத்தனர். யார் இந்த இயேசு? இவரின் இத்தகைய புரட்சிகரப் போதனைக்கும் செயலுக்கும் ஏதேனும் அடிப்படைக் காரணம் உண்டா? ஆபிரகாமை விட பெரியவர் என்கிறாரே? தந்தை இறைவனும் நானும் ஒன்று என்கிறாரே?''இருக்கிறவர் நானே'' என்கிறாரே?. இத்தகைய கேள்விகளை யூதர்கள் அன்று கேட்டதில் வியப்பில்லை. குறிப்பாக, ஆபிரகாமுக்கும் இயேசுவுக்கும் உள்ள உறவு கருதத்தக்கது. யூதர்கள் ஆபிரகாமைத் தங்கள் தந்தை என ஏற்றனர். அதனால் இயேசுவோ ஆபிரகாம் பிறப்பதற்கு முன்னரே தாம் இருப்பதாக அழுத்திக் கூறுகிறார். இதைக் கேட்ட ''யூதர்கள்'' இயேசு மீது எறியக் ''கற்களை எடுத்தனர்'' (யோ: 8:58-59). இயேசு தம்மையே கடவுளுக்கு நிகராக்கிக் கொண்டார் என்பதே இதற்கு அவர் காட்டும் காரணம். ஆனால் இவர் யாரோ? என்று சிந்திக்க உண்மையைக்கண்டு கொள்ள இவர்களால் முடியவில்லை. ''இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றுமே மாறாதவர்''(எபி 13:8)

வயது என்ற வரம்பை வைத்துக் கொண்டு உண்மையைக் கூனி குறுக்க முயற்சித்தார்கள் முடியவில்லை. முடங்கிப் போனார்கள். இயேசுவை நாம் ஏற்பதற்கு நமக்கு ''நம்பிக்கை'' வேண்டும். நம் இதயத் தில் ஒரு மாற்றம் நிகழவேண்டும். இனி நிகழ்த்துவோம். எம் வாழ்வில் வரும் அத்தனை வரம்புகளையும் அகற்றி விட்டு, திறந்த மனத்தோடு அடுத்திருப்பவரை பார்ப்போம். உண்மை யைத்தேடுவோம். நியாயத்தைப் பார்ப்போம். எம் மத்தியில் தீமை வரவே வாய்ப்பு இல்லை. நல்லவைகள் நடக்கும். நாம் வாழ்வு பெறுவோம்.

ம. பிரான்சிஸ்க்,
கத்தோலிக்க சுதந்திர,
பத்திரிகையாளர்.

# நீ உலகில் இருந்து கடமைகளைச் செய் உன் இதயத்தில் இறைவன் குடிகொள்ளட்டும்

படகு உள்ளது படகை தண்ணீரில் எவ்வளவு காலமும்வைத்திருக்கலாம் தவறில்லை. ஆனால் நீர் படகினுள் புகுந்து விட்டால் படகு கவிழ்ந்து விடும். எவ்வளவு நீளமான படகாயினும் அது நீர் மேல் மிதக்கிறது.

ஆனால் தண்ணீர் உள்ளே நுழைந்ததும் படகு கவிழ்ந்து விடும். உலக வாழ்க்கையில் ஈடுபடு தவறொன்றுமில்லை. வாழ்க்கையை அனுபவி தவறில்லை. ஆனால் உலக சம்பந்தமான உணர்வுகளை இதயத்தில் தேக்கி வைத்துக் கொள்ளாதே நீ கவிழ்ந்து விடுவாய்.

நீ உலகத்தில் இருந்து கொண்டு உன் கடமைகளைச் செய். குடும்பத்தைப் பராமரி, வியாபாரம், தொழில், அலுவலக வேலை எல்லாவறிலும் ஈடுபடு தவறில்லை. ஆனால் அவையெல்லாம் ஓர் அளவில் இருக்கட்டும். அவற்றின் உணர்வுகள் தேங்கலாகாது. உன்னிடம் இருக்கும் ஒரே இதயத்தில் இறைவன் குடிகொள்ளட்டும்.


உடலைக் கொண்டு என்ன வேண்டுமானாலும் செய். அப்போது வேலை வழிபாடாக உயர்மாற்றமடையும். உறுதியான நம்பிக்கைகளின் அடிப்படையில் சண்டையிடுதல் அறிவற்ற செயல். அன்பில்லாத போது உறுதியான நம்பிக்கையை எவ்வாறு வளர்த்துக் கொள்வாய்? திருமணம் நடக்கிறது. அன்பு பெருகிறது. அதற்குப் பிறகே உறுதியான நம்பிக்கை வளர்கிறது. நம்பிக்கையை உறுதி செய்த பின்னர் தான் அன்பு கொள்கிறாயா? அது சரியல்ல. முதலில் அன்பு செலுத்துகிறாய் நம்பிக்கை உறுதிப்படாத போதும் அன்பு பெருகுகிறது. தொந்தரவுகள் ஏற்படுகின்றன. அதற்குக் காரணம் அன்பின் குறைவே தவிர உறுதியான நம்பிக்கையின் குறையல்ல. அன்பு காரணமாக திருமணம் நடந்தது. நம்பிக்கை



உறுதி குறைந்ததன் காரணமாக திருமணம் விவாகரத்தில் முடிந்தது. அன்பு முதலில் உறுதியான நம்பிக்கை பிறகு.

ஜெய் சாய்ராம் யாதவன்

# சித்திரை புத்தாண்டு சிறப்பு மலர்-14.04.2011

ஏமது வாடிக்கையாளர்கள் உள்ளிட்ட சகல இலங்கை மக்களுக்கும்
மகிழ்ச்சியும் சுபீட்சமும் நிறைந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்!

**புத்தாண்டின் குதூகலத்தைத்
தினமும் அனுபவிக்க விசேட பரிசுகள்**

HNB உடன் புத்தாண்டுக் கொடுக்கல் வாங்கலை
ஆரம்பிக்கும் உங்களுக்கு பெறுமதியான பரிசுகள்.

சேமிப்பு அல்லது சிறுவர் சேமிப்புக் கணக்கில்
ரூ.25,000/-ஐ வைப்புச் செய்யும் உங்களுக்கு
**ஆறு பெறுமதிமிக்க உணவு பரிமாறும் டிஷ்களின் தொகுதி ஒன்று.**

சேமிப்பு அல்லது சிறுவர் சேமிப்புக் கணக்கில்
ரூ.10,000/-ஐ வைப்புச் செய்யும் உங்களுக்கு
**ஆறு வண்ண வண்ண குவளைகளின் (Mugs) தொகுதி ஒன்று.**

சிங்கிதி மழலை, சிங்கிதி சிறுவர் அல்லது HNB Teen கணக்கில்
ரூ.2,500/-ஐ வைப்புச் செய்தால்
**சிங்கிதி ஜம்போ உண்டியல் ஒன்று.**



SAATCHI & SAATCHI

புத்தாண்டுக் கொடுக்கல் வாங்கலுக்காக HNB வாடிக்கையாளர் நிலையங்கள் (வடமாகாண HNB வாடிக்கையாளர் நிலையங்கள் தவிர்ந்த ஏனைய வாடிக்கையாளர் நிலையங்கள்) ஏப்ரில் 14ஆம் திகதி பி.ப. 4 மணி முதல் பி.ப. 6 மணி வரை திறந்திருக்கும். புத்தாண்டுக் கொடுக்கல் வாங்கலுக்காக வடமாகாண HNB வாடிக்கையாளர் நிலையங்கள் ஏப்பிரல் 14ஆம் திகதி மு.ப 11.45 முதல் பி.ப 4.30 வரை திறந்திருக்கும். நிபந்தனைகளுக்கு உட்பட்டது. மேற்குறிப்பிட்ட வைப்புத்தொகைகள் குறைந்தபட்சம் 6 மாதங்களுக்குக் கணக்கில் பேணப்பட வேண்டும். பரிசுகள் கையிருப்பில் உள்ள வரை மட்டுமே வழங்கப்படும்.

பிச் ரேட்டிங் AA⁻ (lka)

HNB
உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி


## அனைவருக்கும் எம் இனிய புத்தாண்டு வாழ்துத்துக்கள்




## நோயல் விமலேந்திரன் வெற்றிக்கிண்ண இருபது-20 தொடர்

# ரியூடர் 'ரன் மழை' பொழிந்தார்

# சென்.பற்றிக்ஸ் கல்லூரி சம்பியனானது

(யாழ்ப்பாணம்)

ரியூடர் ரன் மழை பொழிய நோயல் விமலேந்திரன் வெற்றிக்கிண்ணத்தை தட்டிச் சென்றது சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி விளையாட்டு அவை நடத்தும் நோயல் விமலேந்திரன் வெற்றிக்கிண்ண இருபது-20 அகில இலங்கை ரீதியான கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் நான்காவது ஆண்டின் இறுதி ஆட்டம் நேற்று புதன்கிழமை யாழ்ப்பாணக் கல்லூரி பிக்னெல் மைதானத்தில் நடைபெற்றது.

இவ் இறுதியாட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியினை எதிர்த்து யாழ்ப்பாணக் கல்லூரி அணி மோதியது.

இச் சுற்றுப் போட்டியில் அகில இலங்கை ரீதியில் மன்னார் சென்.சேவியர் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, ஸ்கந்த வரோதயக் கல்லூரி, சென்.பற்றிக்ஸ் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, இசப்பத்தான கல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரி, கைதடி நவீல்ட்ஸ் பாடசாலை, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி, கொக்குவில் இந்துக் கல்லூரி, வித்தியாலோக கல்லூரி, அநுராதபுரம் மத்திய கல்லூரி, கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் ஆகிய 14 அணிகள் பங்குபற்றின்.

இறுதிப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது. ஆரம்பம் முதல் பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கு நல்ல ஆரம்பம் கிடைத்தது. ஆரம்ப ஜோடி முதல் விக்கெட்டிற்காக 42 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற்றது.

ஓட்டவிகிதம் தொடக்கம் முதல் 9 இற்கு மேலாக சென்றது: ரியூடர் அபாரமாக ஆடினார். இவருக்கு இணையாக எரிக்பிரதாப் ஆடினார். இருவரும் யாழ்ப்பாணக் கல்லூரியின் பந்துவீச்சினை நாலாபுறமும் சிறதடித்தனர்.

ரியூடர் சதம் அடிக்கும் தறுவாயில் இருக்கும் போது வீணான அடி ஒன்றினை அடிக்க முனைந்து 97 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ரியூடர் 55 பந்துகளில் பெற்ற இவ் ஓட்டத்தில் 5 சிக்ஸர்களும், 10 பவுண்டரிகளும் அடங்கும்.

தொடர்ந்து வந்த வீரர்களும் கை கொடுக்க இறுதி ஓவர்கள் சிக்ஸர்களுடன் கூடிய ஓவர்களாக மாற யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 195 ஓட்டங்களை குவித்தது.

துடுப்பாட்டத்தில் எரிக் பிரதாப் 23 பந்துகளில் 43 ஓட்டங்களையும், மொரிஸ் 18 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் பிரியலக்ஸன், கஜீந்திரன் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 196 என்ற வெற்றியிலக்கினை விரட்டிய யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்கு சிக்ஸர் பவுண்டரிகளாக ஆரம்பமே அதிரடியாக அமைந்தது. எனினும் அதே ஆட்டம் தொடர்ந்து நீடிக்க சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் பந்துவீச்சாளர்கள் விடவில்லை. அடுத்தடுத்து சீரான இடைவெளியில் விக்கெட்டுக்கள் வீழ்த்தப்பட்டன.

ஓட்ட எண்ணிக்கையினை உயர்த்துவதை விட விக்கெட்டுக்கள் வீழ்வதனைத் தடுக்க முடியாமல் யாழ்ப்பாணக் கல்லூரி அணி 97 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. வெற்றிக்கிண்ணம் சென்.பற்றிக்ஸ் வசமாகியது.


துடுப்பாட்டத்தில் சீராளன் 21, பிருசோபனன் 14, ஸ்ரீகுகன் 15, பிரியலக்ஸன் 15, மதுசன் 10 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் நோபேர்ட் 11 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும், அஜித் டார்வின் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.












மூன்றாமிடத்திற்காக கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் மகாஜனக் கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற ஆட்டத்தில் 75 ஓட்டங்களால் கொக்குவில் இந்துக் கல்லூரி வெற்றிபெற்றது.

நோயல் விமலேந்திரன் கிண்ணத்தின் அதிக ஓட்டங்கள் பெற்றவர் மற்றும் ஆட்டநாயகன் விருதினை சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் ரியூடரும், சிறந்த பந்துவீச்சாளராக யாழ்ப்பாணக் கல்லூரியின் பிரியலக்ஸனும், தொடர் நாயகனாக கொக்குவில் இந்துக் கல்லூரியின் பங்குஜனும் தெரிவு செய்யப்பட்டனர்.

# சென்னை அணியை வதம் செய்தார் வல்தாரி

# கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணி வெற்றி



(சண்டிகார்)

போல் வல்தாரியின் அதிரடி சதத்தின் மூலம் கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணி 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியை வீழ்த்தியது.

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்) அமைப்பின் 10 அணிகள் மோதும் நான்காவது இருபது-20 கிரிக்கெட் தொடர் இந்தியாவில் நடைபெற்று வருகிறது. நேற்று பஞ்ஜாப்பில் நடைபெற்ற 9ஆவது போட்டியில் கிங்ஸ்லெவின் பஞ்ஜாப் அணியும் சென்னை சுப் பர் கிங்ஸ் அணியும் மோதின.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணித்தலைவர் அடம் கில்கிறிஸ்ட் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு ஆரம்பத்திலேயே அதிர்ச்சி காத்திருந்தது. பிரவீன் குமார் வீசிய ஆட்டத்தின் முதலாவது பந்தில் அனிருதா சிறிகாந்த் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்த பந்தில் சுரேஷ் ரெய்னா பூச்சியத்துடன் வல்தாரிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

தொடர்ந்து இணைந்த முரளிவிஜய்-பத்திரிநாத் ஜோடி பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. இதில் அதிரடி காட்டிய முரளி விஜய் 34 பந்துகளில் அரைச்சதம் கடந்தார்.

இந்த ஜோடி மூன்றாவது விக்கெட்டுக்காக 124 ஓட்டங்கள் சேர்த்த போது முரளி விஜய் 43 பந்துகளில் (6 பவுண்டரிகள், 4 சிக்ஸர்கள் உட்பட) 74 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். அடுத்து களமிறங்கிய அணித்தலைவர் தோனி அதிரடியாக ஆட மறுமுனையில் பத்திரிநாத் 46 பந்துகளில் அரைச்சதம் கடந்தார்.

பிரவீன்குமார் வீசிய 18ஆவது ஓவரில் அணித்தலைவர் தோனி 2 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட 22 ஓட்டங்கள் குவித்து அசத்தினார்.

இந் நிலையில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களையிழந்து 188 ஓட்டங்களை எடுத்தது.

இதில் சுப்பிரமணியம் பத்திரிநாத் ஆட்டமிழக்காமல் 56 பந்துகளில் (8 பவுண்டரிகள் உட்பட) 66 ஓட்டங்களையும் அணித்தலைவர் தோனி 20 பந்துகளில் (4 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 43 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் பிரவீன் குமார் 2 விக்கெட்டுக்களையும் ஹரிஸ், சாவ்லா தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். பதிலுக்கு 189 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்கை விரட்டிய கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணிக்கு கில்கிறிஸ்ட்-வல்தாரி ஜோடி சிறப்பான ஆரம்பத்தை வழங்கினர்.

இந்த ஜோடி முதலாவது விக்கெட்டுக்காக 5.5 ஓவர்களில் 61 ஓட்டங்களை எடுத்த போது அணித்தலைவர் அடம் கில்கிறிஸ்ட் 19 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து மார்ச் களமிறங்க மறுமுனையில் வல்தாரி 23 பந்துகளில் அரைச்சதம் கடந்தார்.

இதில் மார்ஸ் 12 ஓட்டங்களுடன் ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்தார். அடுத்து களமிறங்கி அதிரடியாக ஆடிய சனி சிங் 20 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து வந்த அபிசேக் நாயர் பூச்சியத்துடன் ஆட்டமிழக்க கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணி 14.1 ஓவர்களில் 136 ஓட்டங்களை எடுத்து 4ஆவது விக்கெட்டை இழந்தது.

இந் நிலையில் களமிறங்கிய தினேஷ் கார்த்திக் பொறுப்புடன் ஆட மறுமுனையில் அல்பி மோர்கல் வீசிய ஆட்டத்தின் 17 ஆவது ஓவரில் ஹட்ரிக் பவுண்டரி அடித்த வல்தாரி 52 பந்துகளில் தனது முதலாவது ஐ.பி.எல் சதத்தை பூர்த்தி செய்தார்.

கடைசி ஓவரில் 2 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் ஜகதி வீசிய பந்தில் சுப்பர் சிக்ஸர் விளாசிய தினேஷ் கார்த்திக் வெற்றியை உறுதி செய்தார்.

இந் நிலையில் கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணி 19.1 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 193 ஓட்டங்களை குவித்து 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதில் போல் வல்தாரி 63 பந்துகளில் (19 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 120 ஓட்டங்களையும் தினேஷ் கார்த்திக் 21 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் குவித்தனர்.

இப் போட்டியில் கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணியின் வெற்றிக்குத் திருப்பு முனை அமைத்த வல்தாரி ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

### நாளைய ஆட்டம்

டெக்கான் சார்ஜர்ஸ்
மைதானம்-ஹைதராபாத் எதிர்
பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ்

# கிடைத்தது அறிக்கை; அடுத்தது நட...

ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

ஐ.நா. சபையின் தலைமை அலுவலகத்தில் நிபுணர் குழுவிடமிருந்து அறிக்கையைப் பெற்றுக் கொண்ட செயலாளர் நாயகம் பான் கீ மூன், நிபுணர்களின் பணிக்காகத் தமது நன்றியைத் தெரிவித்ததுடன் அறிக்கையை மிகவும் கவனமாக ஆராய்ந்த பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து சில தினங்களில் முடிபெடுக்கப்படும் என கூறியுள்ளார்.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக வகை கூறுதல் மற்றும் பொறுப்புக் கூறுதல் தொடர்பாக கைக்கொள்ளப்படவேண்டிய வழிமுறைகள் பற்றி ஆராய்வதற்கும் இந்த வழிமுறைகளைச் செயற்படுத்துதல் தொடர்பில் கவனத்தில் எடுக்கப்படவேண்டிய சர்வதேச மட்டத்திலான நடைமுறைகள், அது தொடர்பிலான வேறு அனுபவ முன்மாதிரிகள் தொடர்பான சிபாரிசுகளைத் தெரிவிப்பதற்குமாக மூவர் அடங்கிய இந்த நிபுணர் குழு நியமிக்கப்பட்டிருந்தது.

இந்தோனேசியாவைச் சேர்ந்த மர்சுக்கி தருஸ்மன் தலைமையில் தென்னாபிரிக்காவைச் சேர்ந்த யஸ்மின் சூக்கா, அமெரிக்காவைச் சேர்ந்த ஸ்ரீபன் ரட்னர் ஆகியோர் கடந்த வருடம் மே மாதம்இந்தக் குழுவில் நியமிக்கப்பட்டிருந்தனர்.

30 வருடங்களாகத் தொடர்ந்த இலங்கையின் இன முரண்பாட்டுப் போரில் ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டு லட்சக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்த பின்னணியில் கடந்த 2009ஆம் ஆண்டு மே மாதம் விடுதலைப்புலிகளை தோற்கடித்து வெற்றியடைந்ததாக இலங்கை அரசாங்கம் அறிவித்திருந்தது.

இறுதிக்கட்ட யுத்தத்தின்போது போர்க் குற்றங்களிலும் மனித உரிமை மீறல்களிலும் ஈடுபட்டிருந்ததாக அரசாங்கத்தின் மீதும் விடுதலைப்புலிகள் மீதும் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

யுத்தம் முடிவடைந்ததும் இலங்கைக்கு விஜயம் செய்த ஐ.நாவின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் யுத்தம் நடைபெற்ற பகுதிக்கு மேலாகப் பறந்து சென்று பார்வையிடுவதற்கு மட்டுமே அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இந்த விஜயத்தின் போது ஐ.நா செயலாளர் நாயகத்திற்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின் பின்னர் விடுக்கப்பட்ட இணை அறிக்கையின் தொடர்ச்சியாகவே நிபுணர் குழு நியமிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும் யுத்தம் முடிபடைந்த பின்னர் இறுதிக்கட்ட யுத்த மோதல்கள் இடம்பெற்ற பிரதேசங்களுக்கு ஐ.நா அதிகாரிகள், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் மனிதவுரிமைகள் அமைப்புப் பிரதிநிதிகள் ஆகியோர் சுதந்திரமாகச் சென்று பார்வையிடுவதற்கும் ஆய்வுகளை மேற்கொள்வதற்கும் இலங்கை அரசாங்கம் தொடர்ந்து அனுமதி மறுத்து வருகின்றது.

இந்தநிலையில் இறுதிக்கட்ட யுத்தத்தின்போது நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பில் இலங்கை அரசு வகையும் பொறுப்பும் கூறுவதற்கு எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ஐ.நா செயலாளர் நாயகத்திற்கு ஆலோசனை வழங்குவதற்காகவே இந்த நிபுணர்குழு நியமிக்கப்பட்டது என்று ஐ.நா. அறிவித்துள்ளது.

இந்த குழுவினர் இலங்கை சென்று நிலைமைகள் தொடர்பான ஆராய்வதற்குரிய சந்தர்ப்பத்தை இலங்கை அரசு வழங்காத நிலையில் அங்கு செல்லாமலே தனது ஆய்வுகளை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதாகவும் ஐ.நா கூறியுள்ளது. (சு-5)


**SLEAS விசேட கருத்தரங்கு**

புதிய பிரிவு ஆரம்பம்
15.04 (வெள்ளி) காலை 9.00 மணி
15.04, 18.04, 19.04 காலை 9.00 மணி தொடக்கம் 2.00 மணிவரை
16.04, 17.04 மாலை 1.00 மணி தொடக்கம் 5.00 மணிவரை
கட்டணம் 1200/=
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப் படிப்புக்கள் பிரிவு
யாழ்.போதனா வைத்தியசாலை எதிரே
(4487)

**நிரு ரீயூசன் சென்ரர்**
**கோண்டாவில்**
ஆசிரியர்கள், மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் இனிய சித்திரைப் புத்தாண்டு
**வாழ்த்துக்கள்**

அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்
**GREEDY'S**
**Hotel & Restaurant**
இந்திய, இலங்கை, சீன உணவு வகைகள்
AC, NON AC அறைகள் வாடகைக்கு உண்டு
T.V இலவச இன்டர்னெட் சேவை
திருமண தேவைகளுக்கான கார் வசதி செய்துதரப்படும்
205, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(ராஜா தியேட்டர் பில்டிங்)
தொ.பே: 021 222 1939



ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்களுக்கு எமது இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.
**சித்திவிநாயகர்**
**கல்வி நிலையம்**
K.K.S. றோட், மல்லாகம்
தமிழ்– திரு. பத்மநாதன்
இந்துநாகரிகம்– திரு.ரமணன்
நாடகமும் அரங்கியலும்– திரு. ரமேஸ்
புவியியல்– திரு. கஜன்
அரசியல்– திரு. அசோக்
வரலாறு– திரு.கஜந்தன்
அளவையியல்– திரு.நீதன்
விவசாயம்– திரு.விக்கி
பொருளியல்– திரு.சுதாகரன்
கிறிஸ்தவம்– திரு.மார்க்கிங்
(சி-2969)

**SLEAS வகுப்புக்கள்- கிளிநொச்சி**
கிளிநொச்சி ம.வியில் நடைபெற்றுவந்த SLEAS வகுப்புக்கள் நாளை கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெறும். இதில் புதிதாக இணைய விரும்பும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட தேர்வுநாடிகள் பங்குபற்ற முடியும்.
தொடர்பு: 0776737535
(சி-2970)

**குமரகுரு வாணிபத்தின் வாடிக்கையாளர்களுக்கோர் நற்செய்தி....**
குமரகுருவின் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் மலரும் புத்தாண்டு வாழ்த்தினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
மாபெரும் சித்திரைப் புத்தாண்டினை முன்னிட்டு குமரகுரு வாணிபத்தில் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களில், குமரகுரு பரிசுத்திட்டத்தின் கீழ் இரண்டு அதிர்ஷ்டசாலி வாடிக்கையாளர்களைத் தெரிவு செய்து இரண்டு மோட்டார் சைக்கிள்களை வழங்க உள்ளோம். குமரகுரு வாணிபத்தின் எக்கிளையிலும் பொருட்களை கொள்வனவு செய்து அதற்குரிய பரிசுத்திட்ட சிட்டைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதனையும் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் மனமகிழ்வுடன் தெரியப்படுத்துகின்றோம். அதிர்ஷடத் தெரிவு 14.04.2011 மாலை 3.00மணிக்கு குமரகுரு மல்ரிசொப் முன்றலில் நடைபெறும். அத்துடன் 02 கிலோமீற்றருக்கான FREE HOME DELEVERY சேவையினையும் பெற்றுக்கொள்ளலாம். குமரகுரு வாணிபத்தின் வாடிக்கையாளர் அட்டையைப் பெற்றுள்ள அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் 14.04.2011 புதுவருட தினத்தன்று 12.30-2.30 வரை மட்டும் கைவிசேட பணக்கொடுப்பனவு குமரகுரு மல்ரிசொப் முன்றலில் வழங்கப்படும். இந் நிகழ்வில் அனைத்து வாடிக்கையாளர்களையும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
குமரகுரு மல்ரி சொப் – பிரதான வைத்தியசாலை முன்பாக A9 வீதி கிளிநொச்சி.
குமரகுரு புடைவை அழகுப்பொருள் வாணிபம் – கச்சேரி முன்பாக, A9 வீதி கிளிநொச்சி.
குறிப்பு: குமரகுரு மல்ரி சொப் திறப்பு விழாவினை முன்னிட்டு விசேட பரிசுத்திட்டத்தின் கீழ் இரண்டு மோட்டார் சைக்கிள்களினை பெற்றுக் கொண்ட அதிர்ஷ்டசாலிகள் வருமாறு
K.சுதர்சன் – அராலி நோத், வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணம்.(கிறோகொண்டா)
R.ராதை – குகன் இல்லம், கரணவாய் மத்தி, கரவெட்டி, யாழ்ப்பாணம்.
(சி-2948)

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்



**புதிய வினோ நகைமாடம்**
தங்கப்பவுன் நகை வியாபாரம்
நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு சிறந்த ஸ்தாபனம்
22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்
பிரதான வீதி (செலான் வங்கிக்கு அருகாமை)
சங்கானை
T.P.: 0776002588

**Mobile Plaza**
**Phone Shop**
**மொபைல் ப்ளாசா போன் சொப்**
Main Street, Chankanai
T.P.:0779352902
பிரதான வீதி, சங்கானை.


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.04.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.